கலைநிலையம்

V 4 No. 9 5 [illegible] 931

உ

JL
ஜ211, N128 KN
N131·4·9
L88907

635

KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா	காரியாலயம்:—
உள் நாடு ரூ. 7 8 0	வேளாளர் தெரு,
புற நாடு ரூ. 9 0 0	புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ மார்ச்சு மீ 5 உ [No. 9.

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	161
2.	பிஸாரோ நாடகம் - (அங்கம்-1 களம்-1) R. B. Sheridan	163
3.	சூளாமணி (உரையுடன்) குமாரகாலச் சருக்கம் (10—15)	166
4.	யாப்பிலக்கணம்—(சீர்—தளை)	168
5.	அப்பர் (64-கலை-கட்கஸ்தம்பனம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	170
6.	மானத சாத்திரம் (நிலைப்புலன்.) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L.	172
7.	கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	173
8.	மதிப்புரை	179
9.	வர்த்தமானம்	179

கலாநிலயம்

வாழ்வாங்கு வாழ்பவர். 7.

உவகையாவது ஓர் உள்ளத்தெழுச்சி யென்றோம்.

எழுச்சி நிகழ்ந்ததென்னின் அதற்குப்பின் ஓர் ஒடுக்கமும் நிகழவேண்டும். ஆதலின், ஒரே படித்தாய் உள்ளமானது எக்காலமும் எழுந்தவாறே இருந்தமைதல் இயலாது. நிமிர்ந்த அளவு அமிழ்ந்தாலல்லது பின்னோர்முறை எழுவதற் கில்லை. இப்படி எழுவதும் விழுவதுமாய் உள்ளத்தை உய்த்தானெனில் வாழ்க்கையெனும் வையத்தைச் செலுத்துமொருவன் நலமிகு வலவனாவது எங்ஙனம்? அருமந்த மைந்தன் உருவும் திருவும் அறிவும் நாளுக்குநாள் மிகுபவனாய் வளர்வதைக்காண உவக்கின்ற ஓர் தந்தையின் உள்ளத்தின்கண், அவ்வுகைக்கு அயலேயே, "கூற்றம் கொள்ளுங்கொல், கொடியநோய் பற்றுங்கொல்," என்றென்று இன்னபல அச்சங்கள் உடன்தோன்றி, எழுந்த உள்ளத்தை இழுத்தழுத்த முயல்வது இயற்கையே. இவ்வாறு இழுப்பதில்லையெனின் பின் அவ்வுவகை சுவையற்றதாய்விடும். இன்னிசைக்குச் செவியுடையோர் அழகிய பாடல்களைக் கேட்குங்கால் உவகை எய்துகின்றனர். இவர்களிற் சிலர்க்குத் தாம் சிறப்பாக விழைந்துவக்கின்ற இராகங்கள் இரண்டொன்றிருக்கலாம். அன்னவர், அவ்விராகத்தைப் பாடக்கேட்குங்கால் உள்ளமெழுந்து உவக்கும் நலத்தினால் கண்கலுழ அனுபவித்துப் பிறகு அவ்வுள்ளம் சோர்ந்து அழுங்கி வாடுகின்றவர்களும் ஆவர். துயரமே புகுந்து அவர் உள்ளத்தை உழக்குவதுபோல் தோன்றும். வைகறையில் துயில்நீத்துத் தன் சாளரத்தூடுநோக்குதலும், உவவனத்திலோர் மல்லிகைப்பூங்கொடி மூரலூர்ந்த முகத்தினோடு உலகினிற்கு மங்களம்பாடி வாழ்த்தும் மங்கைபோல் ஒல்குகின்றதைக் காண்கின்றானொருவன். அதற்கயல், பனித்துளிகள் திரண்டொளிரும் பைங்கிளைகளுக்கிடையே பன்னிறச் சிறு புட்கள் இரண்டு மெல்லிய குரலால் கூவிக் குதிகொள, மல்லிகைக் கொடியினோடு இப்புள்ளின் இணையையும் தன் கவிந்த கரங்களால் காத்துநிற்கின்றதென அரசமரம் ஒன்று அச்சூழலின்மருங்கு ஓங்கி விளங்குகின்றது. மாநுட இயற்கைமாறாப் பண்பினனாயின் அவனது உள்ளம் இப்புணர்ப்பின தழகினைப் பருகிக் கழிபேருவகையுடன் எழுதல்வேண்டும். அல்லது, கைக்கெட்டிய புத்தகம் ஒன்றை (நாமிப்பொழுது எடுப்பதுபோல்) எடுத்துத் திறக்கின்றான். அந்நூல் புறநானூறு. இச்செய்யுள் தென்படுகின்றது:—

யாது மூரே யாவருங் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்த
லினிதென மகிழ்ந்தன் றிலமே முனிவி
னின்னா தென்றலு மிலமே மின்னொடு
வானத் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே.

[எல்லாம் எனக்கு ஊர். எல்லாரும் எனக்கு நண்பர். தீமையும் நன்மையும் தாமே வருவனவே யன்றிப் பிறரால் எனக்கு வருவன அல்ல. வருத்தமும் அவ்வருத்தம்தீர்தலும் ஆகிய அவையிரண்டும் முன்னுரைத்தபடி தாமே வருவன. சாவதும் புதியதன்று. வாழ்தல் இனியதென்று மகிழ்வதுமில்லை, அதனை

இன்னது என்று வெறுப்பதுமில்லை. மின்னலோடு மேகம் குளிர்ந்த மழையைப் பெய்வதால் பெருகி, கற்களை மோதிக்கொண்டு ஒலிக்கும் வளப்பமுடைய பெரிய நதியின் நீரின்வழியே போகும் தெப்பத்தைப் போல், அரிய வுயிர்கள் அதனதன் முறையின்படியே செல்லுமென்பதை, அறிவுடையோர் காட்டியிருக்கின்ற நூல்கள் முதலியவைகளிலிருந்து, நன்று தெளிந்திருக்கின்றேன் ஆகலின், மாண்பிற் பெரியோரை வியப்பதுமில்லை, சிறியோரை இகழ்தல் என்பது அதனிலும் இல்லை]

என்ன கலைத்திறம், என்ன மதிநுட்பம், என்ன பேரறிவு, என்ன திப்பிய அமைதி, என்ன சொன்னயம், அளப்பரிய என்னபெருமை யாம்காண இவ் வகவற்பாவினுள் அடங்கியிருக்கின்றது.—யாம் காணுதன இன்னும் எத்தனையோ! இதனைப் பாடிய மாபெரு புலமையோன் கணியன் பூங்குன்றனை நினைக்க நினைக்க உவவை மிகுகின்றது. இத்தகைய புலவன் ஒருவன் இருந்த காலத்தின் தேயத்தின் மேன்மையை நினைத்து உவக்கின்றோம். "மாட்சியிற் பெரியோரை வியத்தலு மிலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று முடிகின்றபோது உவகையோடு எழுந்து உள்ளம் குதிக்கின்றது.

ஆயினும் என்! ஆயினும் என்! விழிகவர் வனப்பினை, பால்பொழி பாடலை, நம்மையே கவர்கின்ற ஓர் செய்யுளை, கண்டு கேட்டு உன்னி உவக்குங்கால் எழுகின்ற உள்ளம் உடனுக்குடனே அதற்கதன் இணையளவு அழுங்குகின்றதில்லையோ. எவ்வுவகைக்கும் இறுதி யென்பதொன்றுளது, என்னும் உண்மை கண்ணுக்குட் பட்டதாரும்பென உறுத்துகின்றதே. உவவனவனப்பினை நோக்கி உவப்பவன் சிந்தையுள், "மைந்த, விடுக விடுக, இதனை விடுத்து இந்நாள் கழுவுமாறு எவ்வாறு எனக் கருதுக" என்னும் எண்ணம் இடைபுக்குக் கவலைவிளைக்காத காலத்தும், "இவ்வழகினைக் காணவுங் கற்றிலாப் புன்மையோர் எத்தனையோ பலர் இவ்வுலகின்கண் இருக்கவோ" என்று பரிகின்றான். இதனை விடுத்து, பல நாள் அடுத்தடுத்துச் சென்றுந் தெவிட்டாது கூத்திற்கும் இயங்குபடக் காட்சிகட்கும் முடுகுகின்ற மக்களை நினைத்துக் கருத்தழிகின்றான். இதனின்று, நன்மைக்கோர் நாட்டமின்றி உழல்கின்ற உலகத்தைக் கண்டு திகைக்கின்றான்.

படித்த பாசுரத்தால் பரவசமாகி உவப்பவன் பாடுதான் என்ன? அழகியதோர் அந்திமாலை மெல்ல மெல்லத் தேய்ந்துபோய் இருள்வந்து சூழ்வதுபோல் அவனது உள்ளத்திலும் உவகை ஒளிநீங்கி ஒருவகைத் துயரம் சூழ்ந்து படர்கின்றது. பதினாயிரத்தில் ஒருவர்கூட இத்தகைய இலக்கியங்களைக் கற்க வேண்டும் என்ற கருத்துடையவர்களாக இல்லையே என்னும் ஓர் நினைவினுற் கலங்குகின்றான். இதனை நீட்டினுல் வாசிக்கவும் மாட்டாமல் நெடுமரம்போல் நிற்பாரை நினைக்குங்கால் நாணத்தால் நைகின்றது அவனுள்ளம். கணியன்பூங்குன்றனனையவர் இக்காலத்தில் பாடுதற் கில்லாவிடினும் அவன் பாடியதைப் படித்து, அவனுடன், ஆருயிர் முறைவழிப்படூஉம் என்பதைத் திறவோர் காட்சியில் தெளிந்து, யாதும் ஊராய் யாவரும் தமக்குக் கேளிராய், தீதும் நன்றும் பிறர்தர வந்ததெனப் பேதுறுமல், பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலுமின்றி வாழ்நாள் நடத்த விழைபவர் பதின்மரேனும் இருப்பரோ என்று ஏங்க நேர்கின்றதெனின், முதலெழுந்த உவகை நிலைப்பதெங்ஙனம். இன்றைக்கு இவ்வுலகம் ஊக்கமொடு கைப்பற்றிக் கொண்டாடுகின்ற ஒவ்வொரு செய்தியும் இப்புறநானூற்றுப் பாட்டின் ஒவ்வோரடிக்கும் மாறுகவே நிகழ்வதைக் காணும்போது உவகைபோய் வருத்தமே விஞ்சுகின்றது.

'Tis Man alone that joy descries
With forward and reverted eyes.

[மனிதனே, முன்னும் பின்னும் கதுவிய கண்களால் உவகையைக் காண்கின்றான்] என்றும்,

Still, where the rosy pleasure leads
See a kindred grief pursue ;

[இன்பந்தான் உன்னை உகந்தழைக்கும்போதெல்லாம், அதற்கு உறவாய ஒரு துன்பமுமோ தொடர்கின்றதே காண்.] என்றும், தாமஸ் க்ரே என்னும் ஆங்கில கவி யொருவர் கூறுமாறு, கலப்பிலா உவகையே உறைவதென்பது வாழ்க்கையில் எங்கும் இல்லையாம். இக்கருத்தையே, இன்னொரு ஆங்கிலக் கவி, பர்ஸி பீஷி ஷெல்லி என்பவர்,

We look before and after
And pine for what is not
Our sincerest laughter
With some pain is fraught
Our sweetest songs are those that
tell of saddest thought.

[முன்னும் பின்னும் பார்த்தவர்களாய், இல்லாததை வேண்டி நைகின்றோம். முழுமனதோடு நாம் சிரிக்கின்ற சிரிப்பிலுங்கூடத் துன்பம் ஒருவண்ணம் செறிந்திருக்கின்றது. எங்கள் இனிமையிற்சிறந்த பாடல்களெல்லாம் துன்பத்திற் சிறந்தஎண்ணங்களை இயம்புவனவே யாகும்]

என வரைந்துள்ள பாசுரத்தில் காணலாம். இவைகளே உண்மையெனற்கு அவரவர் அநுபவங்களே சான்று. எனின், உவகையே நிலைத்த வாழ்க்கையை நாடுதலென்பது மாநுடர்க்கு இயன்றதொன்றுவது எங்கும் இல்லையே.

இவ் வியலாமைமாத்திரமே யன்றி வேறோர் இடரும் உவகையின்திறத்தில் உளது. அழகினுல் தூண்டப்பெறுகின்ற உள்ளத்தெழுச்சியே உவகையாகும் என்ன முன்னர் உவகையின் இலக்கணம் கூறினேம். அவ்வழகினேடு தான் சென்று கலந்துகொள்ளவேண்டும் என்னுமோர் விழைவின் முயற்சிக்கு அறிகுறியாய் அவ்வெழுச்சி நிற்கின்றது. தான் இருக்கின்ற இடத்திலேயே கைவரப்பெறுத காலையிலன்றோ வேறோரிடத்திற்குச் சென்று ஒன்றிலுச் சேர்தல் வேண்டும்? ஆதலின் அழகென்பது தனக்கு அயலாயதொன்றென்னுந் தன்மையில் உள்ளம் விவகரிக்கின்றதென்பதற்கே அதன்கண் தோன்றுஉவகை அடையாள மாகின்றது. பிரபஞ்ச மடங்கலும் தன்னுள் தங்கப்பெற்ற மெய்யுணர்வினனுக்கு, அழகு விகாரம், விழைவு வெறுப்பு, நட்பு பகை என்ற வேற்றுமையில்லை. எல்லாம் 'சிருஷ்டி' என்றவொரு கொள்கையே அவனுள்ளத்தில் குடிகொண்டிருக்கும். எனினும் அவ்வாறு குடிகொண் டிருக்கின்றதென்னும் நினைவையும் அவன் கொள்ளான். "மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்" எனத் தாயுமானவர் வேண்டிய வரமும் இதுவே. ஆதலின், அழகின் உணர்ச்சியும் உவகையின் எழுச்சியும் உள்ளத்திற்கு ஒருவகைப் பயிற்சியே யன்றி வாழ்வின் முதலும் இறுதியும் அவை தாமே ஆகா. நம்முடைய ஆன்மவாழ்க்கையில் குறைவு இருக்கின்றதென்றும் அக்குறைவை நிறப்பிக்கொள்ள வேண்டுமென்றும் தூண்டுகின்ற பிரபஞ்சத்தின் தூய உதவியாம் அழகு. இந்தத் தூண்டுதலுக்கு இலக்காகாதவர், தமக்குக் குறையுளதென்பதையும் அறியாத பேதையர். அவர் கிடக்க, மற்றவர் முன் இங்குக் குறித்தவகைகளில் அழகினுக்கு ஆளாகிஆளாகித் தமக்குரிய முழுமையை எய்துகின்றனர். அம்முழுமையை எய்திய நிலையே வாழ்க்கை எனப்படுமாயினும், அதனை எய்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களை வாழ்வாங்கு வாழ்பவர் என்றழைப்பினும் [illegible]லாம்.

[stamp]

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழி பெயர்ப்பு

[145-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம்—1. களம்—1

வல்வேர்தே:—எல்விரா நகைத்ததற்கு என் பயம்...

பிஸாரோ:—பயமா?

வல்வேர்தே:—ஆம்-அலான்ஸோவின் சாதுர்யமும் யோசனையும் நம் சத்துருக்களை இவ்வளவு வலிமைப்படுத்தியிருக்க, நாம்.......

பிஸாரோ:—அலான்ஸோ! பெரும்பாதகன்! ஆகா! ஒருகாலத்தில் அவன்மேல் எவ்வளவு ஆசை வைத்திருந்தேன். சிறுவனு யிருந்தபோதே, அவன் அன்னை அவனை என்னிடம் கையடைத்தனள்.

[யோசனையில் ஆழ்ந்தவளாய் எல்விரா பின்புறத்தில் உலாவுகின்றுள்]

என்னுடன் உண்டான் என்னுடன் துயின்றான். அவனது இளமைமதியினேடு வளரும் வீர வளமையையும் நான் விரைவிற் கண்டறிந்தேன். எனது ஸாகஸச் செய்கைகளைப் பற்றியெல்லாம் நான் அடிக்கடி அவனுடன்பேசுவதுண்டு. எத்தகைய பெருங்காற்றின் இடைப்பட்டுத் தத்தளித்தோம்-எவ்விதவிபத்துக்களினின்று தப்பினேம்-அப்பா! எவ்வளவு அற்பப் படையுடன் அயல்நாடு சென்றோம். சென்றவிடத்தில் கஷ்டமும் பஞ்சமும் கலகமும் குழப்பமும் நெருக்கிவரும் பகைவர் நடுவில் நம் பலத்தை எவ்விதம் குறைத்தன. இருந்தும், மனந்தளராமல் இவைகளை எல்லாம் எவ்விதம் பொறுத்தேன், எவ்வளவு துணிந்தேன்! இத்தனை கலகக் குழப்பக் கஷ்டங்கள் நடுவில் கைக்குள் அடங்கிய என் சிறு சைனியத்துடன் நான் எப்படிக் கடைசியில் வெற்றியும் அடைந்துவிட்டேன்! இவைகளைப்பற்றியெல்லாம் நான் சொல்லும்போதும் பேசும்போதும் அவ்வாலிபன், அலான்ஸோ, ஆச்சரியத்துடன் கூடிய ஆனந்தக் கண்ணீர்பெருக, என் கழுத்தைக் கட்டிக்கொண்டு நானன்றி "வேறோர் தலைவன் மனமிசைந்து யான் வேண்டேன்" என்று சத்தியம் செய்வான்.

வல்வேர்தே,—இவ்விதம் கருக்கொண்ட நட்பு எவ்விதம் கரைந்ததோ.

பிஸாரோ:—லஸ்கஸஸ்—அவன்தான் மானிட தர்மத்தைப்பற்றி ஏதேதோ பிதற்றி யுக்திவாதம்செய்து அலான்ஸோவின் மனதில் அறிவற்ற பல அறநினைவுகளைக் கிளப்பிவிட்டான். அதனுலன்றே தனக்குத் தேசாபிமானத்தைவிட மானுடாபிமானம் மேலிட்டதென்று வம்புரைத்துச் சென்று பகைவருடன் சேர்ந்தானப் பாதகன்.

வல்வேர்தே:—அவ் விராஜதுரோகி, தங்களையும் தனது நாட்டையும் கைசோரவிட்டு நமக்குக் கொடும் பகைவனுயினன். ஆம்!

பிஸாரோ:—ஆனுல், முதன்முதற் சிறிதும் சலியாது, என் எண்ணத்தை மாற்றி, கொலைசெய்யக் கொண்டிருக்கும் என் வாளை நழுவவிடுவதற்காக, எவ்வளவோ நியாயங்கள் எடுத்துக்காட்டி வேண்டினன். சுதந்தரத்தைப் பற்றியும், நீதியைப் பற்றியும், கருணையைப் பற்றியும் என்னென்னவோ பிதற்றினதுமன்றி, இப்பெருவியர்களை ஒன்றுமறியாக் குற்றமற்ற நம் சகோதரர்களென்றுமன்றோ அழைத்தான்.

வல்வேர்தே:—பெருவியர்களா! கிறிஸ்தவர்களல்லரே அவர்கள். அஞ்ஞானிகள்! அவர்களா நம் சகோதரர்கள்?

பிஸாரோ:-ஆனுல், அவன் வேண்டியழும் பேதைக் கண்ணீர் எனது கன்மார்பில் வீழ்கிறதென் றுணர்ந்ததும், ஓடிச்சென்று பகைவரைச் சேர்ந்தான்....இந்தப் பிஸாரோவின் பாடசாலையிலேயே பயின்றுளானுதலின்—தன் புதுப் படையைத் திறமையொடு நடத்தி என்னை இமைப்பொழுதில்—ஹோ! சொல்லும்போதே கோபமும் மானமும் பற்றி எரிகின்றது!! நிலைகுலைத்துப் புறங்காட்டி யோடும் என் சைனியத்தை முறியடித்துத் துரத்திவிட்டான்.

வல்வேர்தே:—பழிதீர்க்கும் வேளைதான் வந்துவிட்டதே.

பிஸாரோ:—வந்துவிட்டது. நானும் திரும்பி வந்திருக்கின்றேன். என் சைனியமும் பலத்திருக்கின்றது. பிஸாரோ உயிருடனிருப்பதை அச் செருக்குமிக்க சிறுவன் விரைவில் அறிவான். தான் செய்ததற்கெல்லாம் தக்க கைம்மாறு என்ன செய்யவேண்டுமென்பதை நான் நன்றியுடன் மறக்காமலிருக்கின்றேன் என்பதும் அவனுக்கு இதோ தெரியவரும்.

வல்வேர்தே:—ஆனுல் அலான்ஸோ உயிருடன் இருப்பது சந்தேகமாயிற்றே.

பிஸாரோ:—அவன் உயிருடன் இருப்பது நிச்சயம். அவனது மெய்க்காப்பாளன் ஒருவனை இப்பொழுது தான் சிறையாக்கினேம். அத் திறத்தில் பன்னீராயிரம் போர்வீரர்கள் இருக்கின்றனரெனச் சொல்கிறான். அலான்ஸோவும் பெருவிய ரோலாவும் போர்த்தலைவர்களாம். இன்றையதினம் தங்கள் அனுசார பீடத்தில் எல்லாரும் ஒருங்குசேர்ந்து பலியிடப் போகிறார்கள். அவர்கள் நிர்ப்பயமாயிருக்கும் அத்தருணத்தை நாம் தப்பவிடலாகாது. நிராயுதபாணிகளா யிருக்கும்போதே எதிர்த்து........பலியிடுவோரைப் பலியிட்டுவிடவேண்டும்.

எல்விரா:—அதிர்ஷ்ட வீன நிரபராதிகளே! ஐயோ பாவம். உங்கள் ரத்தமே உங்கள் பலிபீடத்தில் தோயவேண்டுமா!

பிஸாரோ:—நல்லது! (உள்ளே எக்காளம் ஊதுகின்றது) எல்விரா உட்செல்.

எல்விரா:—ஏன் யான் ஏகவேண்டும் ?

பிஸாரோ:—ஏனெனில், புருஷர்கள்கூடிச் சிலஆண்மையான காரியங்கள் செய்வதற்கு இருப்பதிங்கே.

எல்விரா:—ஓ புருஷர்களே. நன்றிகெட்ட மூர்க்கப் புருஷர்களே! நிந்திக்கப்பட்டும் ஆசை குறையா அகமுடைய ஓ ஸ்திரீயே!

[வல்வெர்தே பின்புறம் போகின்றான்.]

களித்து உல்லாசமா யிருக்கும் நாட்களில் உங்களுக்கு உற்சாகமும், நம்பிக்கையும், ஆனந்தமும் பயக்கும் எங்கள் கண்பார்வை வேண்டியிருக்கின்றது! வருந்தித் துயருற்ற காலையிலும் எங்கள் மார்புமேற் சாய்ந்து அமைதியும் ஆறுதலும் அடைகின்றீர்கள்! மற்று, பேரவா மேற்கொண்டு ஆரவாரத்துடன் கருமங்கள் புரிகையிலே எங்களை விளையாட்டுப் பதுமைகளாகவும் அடிமைகளாகவும் பாவித்து நடத்துகின்றீர்கள் - நான் இதைவிட் டகலமாட்டேன்.

பிஸாரோ:—ஆயின் இரு. கூடுமாயின் சற்று மௌனமா யிருக்கவேண்டும்.

எல்விரா:—யோசனைசக்தி யற்றவர்கள்தான் பிதற்றினவண்ணமா யிருப்பார்கள். நான் யோசிக்கின்றேன்-எண்ணத்திற்குச் சப்தமில்லையே.

பிஸாரோ:—(ஒருபுறமாய்) இவள் செய்கைகளில் சிறிதுகாலமாய் என்னவோ பல......

[எல்விராவைக் கடுமையாகவும் சந்தேகத்துடனும் உற்று நோக்குகின்றான். அவளும் இவனைக் கம்பீரமாகக் கண்வாங்காமல் பார்க்கின்றாள்]

[லஸ்கஸஸ் அல்மாக்ரோ கஸ்ஸாலோ தவில்லா, போர்ச் சேவகர்கள் போர்த்தலைவர்கள் வருகின்றார்கள்.]

லஸ்கஸஸ் :—பிஸாரோ, சித்தமா யிருக்கின்றோம்.

பிஸாரோ:—வருக, வயது முதிர்ந்த மகானே! நண்பர்காள் வருக! வீரர்காள்! நண்பர்காள்! நாம் இந்நாள்வரை சலியாது பட்ட கஷ்டங்களுக்கு ஓர் முடிவும், பிஸாரோவினது எண்ணங்கள் நிறைவேறும் வேளையும் இன்றே கூடின. நம் பகைவர் நிர்ப்பயமாய்ப் பலியிடுவதிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கின்றார் இப்பொழுது. தைரியத்துடன் அவர்கள் பண்டிகைநடுவிற் புகுந் தடிப்போமானால்—உங்கள்தலைவ னென் வார்த்தையை நம்புங்கள்—நாம் ஒருபோதும் தோல்வியடைய மாட்டோம்.

அல்மாக்ரோ:—முன்னரே நெடுங்காலம் நாம் வேலையற்றுக் கரையோரத்தில் கிடந்து தீர்ந்தோம். பண்டங்கள் ஒன்றுமே இல்லை. போர்ச்சேவகர் முணுமுணுக்கின்றனர். இனி யுத்தம்! யுத்தம்! கத்தி பிடித்தவர்களுக்குக் கொலையும் சக்தி யற்றவர்களுக்குச் சிறையுந்தான் இனி.

தவில்லா:—பெருவியரின் வம்சமே அற்றுப் போகவேண்டும்!

லஸ்கஸஸ்:—இரக்கமில்லையோ, ஈசனே!

அல்மாக்ரோ:—ஆம். எதிர்ப்போம் ஒன்று சேர்ந்து ஒரே நிமிடத்தில்! அப்பொழுதுதான் அலான்ஸோ, செருக்கழிந்து, நமது ஆற்றலைத் தூற்றினனாய் நம் இடுக்கண்நோக்கி இளித்துநிற்பதை யொழிப்பான்.

லஸ்கஸஸ்:—அலான்ஸோவா! செருக்கும் அவமதிப்பும் எள்ளளவும் அவனியற்கையி லில்லையே!

அல்மாக்ரோ:—லஸ்கஸஸ் தன்சீடனுக் கிவ்வளவு பரிந்துபேசுதல் தகுதிதானே.

பிஸாரோ:-அந்தத் துரோகியைப்பற்றிப் பேசவேண்டாம். எனது இரத்தவெறிகொண்ட கத்திக்கு இரையாக்க வன்றி அவன் பேரை நினைக்கவும் வேண்டா—நாமெல்லாம் சம்மதித்துவிட்டோ மன்றோ?

அல்மாக்ரோ: — சம்மதித்துவிட்டோம்.

கஸ்ஸாலோ:—யுத்தம்! யுத்தம்!

[எல்லோரும் அப்படியே கூவுகின்றனர்.]

லஸ்கஸஸ்: — ஆயின் உன் கொடுமையின் அளவு இன்னும் முற்றுப்பெற வில்லையோ! யுத்தமாமே! கருணாகரக் கடவுளே! யார்மீது! உங்கள் அக்ரமக் கொடுமைகள் இன்னும்கூடப் பகைகிளப்பாத இளகிய இருதயமுடைய அரசனொருவனுக்கு விரோதமாகவா! உங்களால் திரஸ்கரிக்கப்பட்ட அவ்வரசன் வெற்றிகொண்டும் சமாதான மாகவேண்டுமென்று மன்றாடுகிறதிலையா? ஜீவஹிம்ஸை யென்பதறியா ஒரு சாதுஜனங்களுக்கு விரோதமாகவா யுத்தம்! பழிபாவமறியாக் குழந்தைகளல்லரோ அவர்கள்; உங்களை இனிய விருந்தினர்களாக நல்வரவேற்றுச் சர்வ சம்மதத்துடன் எல்லாவற்றையும் உங்கள் கையில் ஒப்புவித்தார்களே! என்ன உதாரணகுணம்! தங்கள் சவுகரியத்தையும், செல்வத்தையும், தேசத்தையும் உங்களுடன் பங்கிட்டுக்கொள்ள வில்லையா; அதற்குப் பதிலாக நீங்கள் மோசத்தையும், கொடுமையையும், மானக்கேட்டையும் கொடுத்தீர்கள். நான் சொல்வதற்கெல்லாம் இக் கண்களே சாட்சி. அவர்கள் உங்களைத் தெய்வமாகப் பாவித்து அங்கீகரித்தனர். நீங்களோ பேய்களேபோல நடந்துகொண்டீர்கள்.

பிஸாரோ:—லஸ்கஸஸ்!

லஸ்கஸஸ்.—பிஸாரோ, சொல்வதைக் கேள்!—பிரதானிகளே கேளுங்கள்! கற்பாறைகளைப் பொடியாக்கவல்ல இடியையும், நடுங்கிநிற்கும் பூமியில் ஊடுருவிச்செல்லும் மின்னலையும் நடத்தும் ஒப்பற்ற சக்தியுள்ள கடவுளே கேள். உனது ஆவி என் மனதிற்குத் தைரியம் கொடுப்பதுபோலவே, உனது சக்தியும் அடியேன் வார்த்தைகளை நிறைவேறச் செய்யட்டும். வேண்டா, கேட்டுக்கொள்கின்றேன். பிரதானிகாள்-சுதேசிகளே--வேண்டா—இரக்கின்றேன். தீராப் பேராசையால் இதுவரையில் இக் குற்றமற்ற சாதியோருக்கு நீங்கள் இழைத்த குலைநடுங்கும் கொடுமைகளெல்லாம் போதும்! இன்னுமொருதரம் ஆரம்பிக்க வேண்டா. வியாகுலமே அடங்கு! துக்கத் துளிகளே நீங்கள் விழுந்துதான் என்ன பயன்! மார்பைப் பிளக்கும் வேதனையே, என் தொண்டையை அடைக்காதே. ஐயோ! யான் வேண்டுவதெல்லாம் என்ன! நீங்கள் சத்துருக்கள் என்று பெயர்வைத்திருக்கின்றீர்களே, அவர்களிடம் என்னை இன்னொருதரம் தூதனுப்பலாகாதா? நீங்கள் அனுதாபப் படுகின்றீர் என்னும் வதந்தியுடன் அவர்களிடம் செல்வேனானால் உங்களுக்கு எல்லா நன்மைகளையும் பெற்று வருவேன்.

[எல்விரா இருந்தஇடம் திரும்பி]

எல்விரா அழுகின்றனையா? ஐயோ! இக்கொடிய நிலை உன் மனத்தையன்றி வேறொருவர் மனத்தையும் உருக்கவில்லையா!

அல்மாக்ரோ :—ஏனெனில்—உன்னையும் அவளையும் தவிர இங்கே வேறு பெண்பால் இல்லையே.

பிஸாரோ:—இவ் வீண்வாதத்தை நிறுத்துங்கள். காலம் பறக்கின்றது. நமக்கு வாய்த்த தருணத்தையும் இழப்போம். தலைவர்களே, சண்டைக்குச் சித்தம் தானே?

அல்மாக்ரோ:—சித்தம்!

லஸ்கஸஸ்:—இரத்தவெறிகொண்ட, ஓ, மானுடர்களே!

[முழங்காற்படி யிடுகின்றான்]

தெய்வமே, என் தேசத்தாரை வாழ்த்தவன்றிச் சபிக்கவன்று நீ என்னைச் சிருஷ்டித்தது. ஆயினும் இம் மூர்க்கரை நான் இப்பொழுது வாழ்த்துவேனாயின், அது உன் கருணைக்கு விரோதமான தெய்வநிந்தனையே யாகும். (எழுந்திருக்கின்றான்) மாட்டேன்! உங்கள் நோக்கமும் கொலைத்தொழிலும் நாசமாய்ப் போகட்டும். உங்களை ஒன்றாய்ச்சேர்க்கும் இரத்தத் தொடர்பு நிர்மூலமாகட்டும். கலகமும் கட்சியும் உண்டாகி உங்கள் கொடிய ஆசையெல்லாம் படுநாசமாகாதா! இன்றைக்குச் சிந்தும் நிரபராதிகளின் உதிரப்பழியெல்லாம் உங்கள் தலையிலும் உங்கள் வம்சத்தின் தலையிலும் விடியட்டும். உங்களை விட்டகல்கின்றேன், இனி மீள்வதில்லை. காட்டிலும் குகையிலும் ஒளிந்துகொள்வேன். பரிசுத்த கடவுள் இட்ட கற்பனைகளை யவமதித்துத் திரஸ்கரிக்கும் நீங்களும், நானும் அவருடைய நியாயஸ்தலத்தில் சந்திக்கும்போது இப்பொழுது உங்களை இடித்துக்காட்டும் என் ஹிருதயத்தை யுடைக்கின்ற வேதனாவஸ்தைகளை நீங்கள் உணர்ந்தறியாமற் போவீரோ!

எல்விரா:—(எழுந்து லஸ்கஸஸின் கையைப் பிடித்துக்கொண்டு) ஓ! லஸ்கஸஸ், என்னையும் உன்னுடன் அழைத்துச் செல்.

லஸ்கஸஸ்:-வாராதே, அவமதிப்படைந்த பெருமாட்டியே! இங்கு யானொருவனே உபயோகமில்லாதவனாக இருக்கின்றேன். விவேகமும் தெய்வநீதியும் வீணே வாதாடியவிடத்தில் ஒருவேளை உன் சவுந்தரியம் இரக்கம்காட்டத் தூண்டலாம். ஹோ! கூடுமாயின் அப்பேதைகளி னுயிரை இரக்ஷியாயோ! அப்பொழுதுதான் நீ செய்த தோஷத்தை மீட்டினவளாவாய். இரக்கம் காட்டுகின்றவர்களே இரக்கம் பெறுவார்கள்.

பிஸாரோ :—என்ன, எல்விரா! என்னைவிட்டு நீ போகவேண்டுமோ!

எல்விரா :—நான் திகைத்துவிட்டேன், கண்டு வெருண்டேன்! உங்கள் குரூரமும்—அத் திவ்ய லஸ்கஸஸூம், ஹோ! இப்பொழுது அவர் தேவர்களினும் உயர்ந்தவராய்த் தோன்றினர். நீங்களோ—நீங்களெல்லாம் மனிதருக்கும் கீழ்ப்பட்டவர்களாய்க் காணப்படுகின்றீர்.

பிஸாரோ:—ஆகா! கருணை யொன்றுதான் சிற்சில சமயங்களில் அழகுக் கழகுசெய்வது.

எல்விரா:—தர்மம் ஒன்றுதான் எப்பொழுதும் வீரனுக்கு ஜயம் கொடுக்கின்றது

அல்மாக்ரோ:—அப்பா! கடவுளருளால் அந்தக் கிழ நன்னெறி ஆசிரியன் தொலைந்தான்.

கஸ்ஸாலோ:—பிரசங்கங்கள் செய்துதிரியும் தன் சீடன் அலான்ஸோவினிடம் போய்ச் சேர்வான் என்று எண்ணுகின்றேன்.

பிஸாரோ:—(அல்மாக்ரோவுக்கு) இப்பொழுது நாம் கூடிப் படையெடுத்துச் செல்வதைப்பற்றி........ பலியிடும் வேளை நண்பகல். வழிகாட்டுபவர்களுடன் கலந்துபேசி இன்ன சேனாதிபதி இன்னவழி போக வேண்டுமென்பதை நிச்சயித்துக்கொள்ள வேண்டும். திடீரென்று தோன்றி நாம் அவர்களைத் திகைக்கச் செய்வோமானால் வெற்றியடைந்து விடுவோம் திண்ணம். வெற்றி யடைந்துவிட்டால் நகர்வாயில் நமக்குத் திறந்துவிட்டது.

அல்மாக்ரோ: — பிஸாரோவும் 'பெரு' நாட்டுச் சக்ரவர்த்தியாய் விட்டார்.

பிஸாரோ:-அவ்வளவு அவசரம் வேண்டா. ஆசையும் சிறிதுகாலம் யுக்தியுடன் கலந்தே சில காரியங்கள் செய்யவேண்டும். அத்தாலிபாவே சிறிதுகாலம் செங்கோலைத் தன்கையிற் பிடித்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. நான் ஸ்பெயின் அரசனுக்குக் கீழ்ப்பட்டவன் போலவே இருப்பேன். அவனது புத்திரியை மணந்து, நான் விரும்பும் அவ்வரசுரிமையை நான் வகிக்கும் வரையில்:—

[எல்விரா திடுக்கிட் டெழுகின்றாள்]

அல்மாக்ரோ:—அது சரி. தந்திரச் சூழ்ச்சிகளில் பிஸாரோ, பிரதானியின் விவேகத்துடன் வீரனது பராக்கிரமத்தையும் நடத்துகின்றார் பார்.

வல்வெர்தே :— (எல்விராவுக்கு இரகசியமாய்) கேட்டாயா, எல்விரா.

எல்விரா:—ஆகா—அதுவே தக்கது!

பிஸாரோ :—என்ன, கோபம் மிகக் கொண்டனை போலும்? என் இதயம் முழுவதும் குடிகொண்டிருப்பது எல்விராவே. நீதான் எண்ணிப்பார்—ஓர் செங்கோல் என்னைக் கூப்பிட் டழைக்கின்றதே.

எல்விரா:—கோபமா? இல்லை உனது புகழே யான் வழிபடு விக்ரகமென்று அறியாயோ நீ! இதுதான் மிக்க மகிமையுள்ளது. என்ன நியாயம், என்ன கௌரவம் இதற்கு!

பிஸாரோ:—இதற்கெல்லாம் என்ன அர்த்தம், எல்விரா?

எல்விரா:-ஓ! ஒன்றுமில்லை! ஏதோ பெண்ணொருத்தி பிதற்றினது-பொறுமையால் உண்டாகும் சஞ்சலமோ என்னவோ; அது இவ் விராஜவீரனின் பாட்டைக்கு எவ்விதத்திலும் இடையூறாக நிற்கவேண்டாம்.

[உள்ளே எக்காளம் ஊதுகின்றது]

யுத்தாயுதங்கள் உங்கள் வெய்ய கையினுட்புகக் காத்திருக்கின்றன. போங்கள், இவருடன் நின்று போர்செய்யும் தீரவீரர்களே புறப்படுங்கள்—போங்கள்.

பிஸாரோ:—எனின், நீ என்னுடன் வரவில்லையா?

எல்விரா:—சந்தேகமுமா! 'பெரு'வின் சக்ரவர்த்தியாகப் போகின்றவரை நானேயன்றோ முதன்முதல் வாழ்த்தி யழைக்கவேண்டும்.

[கோமேஸ் வருகின்றான்]

அல்மாக்ரோ:—என்ன, கோமேஸ், என்ன செய்தி?

கோமேஸ்:—அதோ அக் குன்றிலுள்ள பனஞ்சோலையில், அவர்களது சிற்றரசன் ஒருவனை அவன் சேவகனுடன் துரத்திப் வெகு சுலபமாய்ப் பிடித்துவிட்டோம்; ஆயினும் அவமதிப்புடன் கூடிய கோப மொழிகளன்றி வேறொன்றும் அவன் வாயினின்று வரவில்லை.

பிஸாரோ:—எம்முன் இழுத்துவா அவனை.

[எல்விரா வியாகுலத்துடன் உட்காருகின்றாள். கோமேஸ் உட்சென்று ஒரோஸிம்போவையும் அவன் சேவகனையும் விலங்கிட்டுக் கொண்டுவருகின்றான்]

நீ யார்? அன்னியனே!

ஒரோஸிம்போ :—முதலில் இக் கள்வர்களுக்குத் தலைவன் எவனென்று எனக்குச் சொல்.

பிஸாரோ:—ஹா!

அல்மாக்ரோ :—பைத்தியமே! பிளந்துவிடுங்கள் அவன் நாவை; இல்லாவிட்டால் ....

ஒரோஸிம்போ:—உண்மையில்-சில இரகசியங்கள் வெளிவந்துவிடும்.

தவில்லா:—(தன் கத்தியைக் காட்டி) இதை அவன் மார்பிற் செலுத்திவிடட்டுமா?

ஒரோஸிம்போ:— (பிஸாரோவைப் பார்த்து) உன் சைனியத்தில் இவனைப்போன்ற ஆண்மைச்சேவகர் இன்னு மனேகர் இருந்து உனக்குக் கௌரவ முண்டாக்குகின்றார்களோ?

பிஸாரோ:--என்னடா ஏசுகின்றாய்! இச்செருக்கே உனக்கு நமனாய் நின்றது. நீ சாகத்தான் வேண்டும். ஓ, மயிர்நரைத்த முண்டமே. ஆனால் முதலில் உனக்குத் தெரிந்தவைகளெல்லாம் சொல்லிவிடு.

ஒரோஸிம்போ:—தாங்கள் இப்பொழுது தயை கூர்ந்து எனக்கு என்ன வாக்களித்தீர்களென்பது தெரியும்—நான் சாவேன் என்பது.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[149-வது பக்கத் தொடர்ச்சி]

3. குமார காலச் சருக்கம்.

78. திருவிளைத் துலகுகண் மலரத் தெவ்வர்தம்
புரிவளை நன்னகர்ச் செல்வம் புல்லென
வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோ
யெரிவளைத் திடுவதோ ரிளமை யெய்தினர். 10.

தெவ்வர்தம் - பகைவர்களது, புரிவளை - புரிந்த சங்குகளையுடைய, நல் நகர் - நல்ல நகரங்களின், செல்வம் - செல்வமானது, புல் என - பொலிவழிந்து தோன்ற, (அதனால்) திருவிளைத்து - செல்வத்தை உண்டாக்கி, உலகு கண் மலர - உலகானது கண் மலர்ந்து மகிழ்ச்சியடையும்படியதாகி, வரி வளைத் தோளியர் - கோடுகள் உடைய வளையல்களை யணிந்த தோள்களையுடைய மாதர்களது, மனத்துள் - மனதினுள், காமநோய் - காம நோயாகிய, எரி - நெருப்பை, வளைத்திடுவது- சூழும்படி செய்வதற்குரிய, ஓர் - ஒப்பற்ற, இளமை எய்தினர் - இளமைப் பருவத்தை அக்குமாரர்கள் அடைந்தனர்.

இக்குமாரர்கள் இங்கு இளமை எய்தி வளருங்கால், பகைவருடைய நாடுகள் இவர் நாட்டிற்கு இணையாகாமல் பொலிவு இழந்தன வென்பதும், இவர்களுடைய நாடு திருவிற்சிறந்த தென்பதும், மாதர்கள் இவர்களைக் கண்டுகண்டு காமுற்று உழன்றனர் என்பதும் இச்செய்யுளின் கருத்து.

---

79. உவர்விளை கடற்கொடிப் பவள மோட்டிய
துவரிதழ் வாயவர் துளங்கு மேனிய
ரவர்கடம் மருள்கொலோ வனங்க னுய்மலர்
கவர்கணை கடைக்கணித் துருவு காட்டினர். 11.

உவர்விளை - உப்புவிளைகின்ற, கடல் - கடலிலுள்ள, கொடிப் பவளம் - பவளக்கொடியை, ஒட்டிய - வென்ற, துவர் - சிவந்த, இதழ் - உதடுகளையுடைய, வாயவர் - வாயை உடையவர்களும், துளங்கு - பிரகாசிக்கின்ற, மேனியர் - மேனியை உடையவர்களும் ஆகிய, அவர்கள் - அக்குமாரர், தம் - தமது, அருள் கொலோ - அருளினாலோ, ஆய் - ஆய்ந்த, மலர் - மலர்ந்த, கவர் - (கருத்தை) கவர்கின்ற, கணை - பாணங்களை, கடைக்கணித்து - பரிவு கூர்ந்து உதவி, அனங்கன் - மன்மதனுடைய, உருவு- உருவத்தையும், காட்டினர் - (மாதர்களுக்குத் தெரிய) காட்டினர்?

குமாரரிவ் விருவரும் தம் அருளினால், அனங்கனது உருவம் இவ்வாறு இருக்கும் என்று மாதர்களுக்குக் காட்டினர், என்பது கருத்து. 'தீவிரி யாம்பலிற் சிவந்த வாயினன்' என முன் 76-வது செய்யுளில் வந்ததற் கிணங்க, 'உவர்விளை..........அவர்கள்' என்னுஞ் சொற்கள் விசயன் திவிட்டன் என்னும் இவ்விரு அரசகுமாரர்களைக் குறிப்பதாகக்கொண்டு, அவர்கள் தம் அருளினாலோ அனங்கனது உருவத்தைத் தம்மில் காட்டினர் எனப் பொருள்கண்டோம். அல்லது, அச்சொற்கள் பொதுவாக மாதர்களைக் குறிப்பதாகக்கொண்டு, அம்மாதர்பால் உள்ள அருளினாலோ, இம்மைந்தர் அவர்களுக்கு மன்மதன் உருவம் இன்னபடியிருக்கும் என்று தாம் தோன்றிக் காட்டினர், என்றும் உரைக்கலாம்.

அல்லது, 'அவர்கள்தம் மருள் கொலோ' எனப் பிரித்து, அம்மாதர்கள் தம் மயக்கத்தினாலோ, மன்மதன் உருவத்தைக் காட்டிவிட்டதுபோல் இக்குமாரர்களை மதித்து நோக்கினர், என்பதற்கும் இடமுளது. மதிகாட்டும் முகம், முகில் காட்டும் கூந்தல், என்பன போன்ற வழக்குக்களில், காட்டுதல்என்பது தோன்றுதல் என்னும் பொருளில் பயிலக் காணலாம்.

ஆய்மலர், மலர்கவர், கவர்கணை, என்னும் இம்மூன்றும் வினைத்தொகைகள். கடைக்கணித்தல், என்பது கிருபைகொள்ளல். கணை கடைக்கணித்து, என்பது, கணைகளைக் கிருபைகூர்ந்து எய்தருளி—காமம் விளைவித்து—எனப் பொருள்படும். அல்லது, கடைக்கணித்தல், என்பதற்குப் புறக்கணித்தல் என்னும் பொருளும் பொருந்தலாம். எனின், மன்மதனுடைய மலர்க்கணைகளைக் கொள்ளாமல்விட்டு அவனுடைய உருவத்தைமாத்திரம் காட்டினர், என்று பொருள்படும்.

---

80. கடலொளி மணிவணன் கனவில் வந்தெம
துடலகம் வெறுவிதா யுள்ளம் வவ்வினன்
விடலில னெம்முயிர் விடுக்குங் கொல்லென
மடவர லவர்குழா மயக்க முற்றதே. 12.

கடல் ஒளி மணிவணன் - கடலின் நிறம்போன்ற மரகத நிறமுடைய திவிட்டன், கனவில் வந்து - கனவின்கண் தோன்றி, எமது - எமது, உடலகம் - உடலானது, வெறுவிதாய்-வெறுமையாகும்படி, உள்ளம்- உள்ளங்களை, வவ்வினன் - கவர்ந்துகொண்டான். விடல் இலன்-அதனை மீண்டு விடவில்லை. (உள்ளத்தைத்தான் அவன் விடாமல் பிடித்து வைத்திருந்தாலும்) எம் உயிர் - எங்கள் உயிர்களையாகிலும், விடுக்குங்கொல் - விடுவானோ, என - என்று, மடவரல் அவர் குழாம் - மாதர்களின் கூட்டம், மயக்கம் உற்றது - மயக்க மடைந்திருந்தது.

உள்ளமெலாந் துறந்துகிடக்கின்ற மாதர்கள் தம் உயிரேனும் எஞ்சினற் போதுமென மயங்கினர் என்பது இச்செய்யுளின் பொருள். திவிட்டனைக் கண்டு கண்டு காமத்தால் அழிகின்ற மாதர், தம் கனவினில் அவன் எய்துதலும் ஆற்றாமை பின்னும் அதிகரித்து உணர்வும் தம் நினைவும் நீங்கி, உயிர் உண்டோ இல்லையோ என்னும்படி ஆயினர்.

---

81. வார்வளை வண்ணனென் மனத்து ளான்பிற
ரேர்வளர் நெடுங்கணுக் கிலக்க மல்லனற்
கார்வளர் கொம்பனா ரிவர்கள் காமநோ
யார்வளர்த் தவர்கொலென் பவரு மாயினர். 13.

வார்வளை வண்ணன் - நீரிலுள்ள சங்குபோன்ற நிறமுடைய விசயன், என் மனத்து உளான் - என் மனத்திற்குள்ளேயே இருக்கின்றான். (ஆகையால்) பிறர் - மற்றவர்களுடைய, ஏர்வளர் - அழகு மிகுகின்ற, நெடுங்கணுக்கு - பெரிய கண்களுக்கு, இலக்கம் அல்லன் - தெரியக்கூடியவன் அல்லன் (அப்படியிருக்க) கார்வளர் கொம்பு அனார் இவர்கள் - மேகம் வளர்கின்ற கொம்புபோன்ற இம்மாதர்களுக்கு, காம நோய் - காம நோயை, யார் வளர்த்தவர் கொல் - யார் உண்டாக்கி வளர்த்திருக்கக்கூடும், என்பவரும் ஆயினார் - என்று சில மாதர் ஐயமுற்றவர்கள் ஆயினர்.

மேகம் வளரப்பெற்ற ஒரு பூங்கொம்பு உளதாயின் அது போல்பவர் கூந்தலையுடைய மாதர், என்னுமிது இல்பொருளுவமை.

---

82. கண்ணிலாங் கவினொளிக் காளை மார்திறத்
துண்ணிலா வெழுதரு காம வூழெரி
வெண்ணிலாச் சுடர்சுட விரிந்து நாண்விடாப்
பெண்ணிலாம் பிறிதுயிர் பெரிய தில்லையே. 14.

கண் நிலாம் - பெருமைதங்கிய, கவின் ஒளி - அழகிய ஒளியினை உடைய, காளைமார் திறத்து - இந்தக் குமாரர்களின்பொருட்டு, உள்நிலா - உள்ளத்தில் நில்லாமல், எழுதரு - வெளிவந்து எழுகின்ற, காமம் - காமமாகிய , ஊழ்எரி - ஊழித்தீ எனத்தக்க, வெண்- வெண்மையான, நிலா - சந்திரனது, சுடர்சுட - கிரணங்கள் சுடுவதால், இரிந்து - உடைந்து, நாண் - தங்கள் நாணத்தை, விடா - முற்றிலும் விட்டுவிடாத, பெண்ணில் - பெண்மையைப்போல், பெரியது ஆம் - பெருமையுடையது ஆகக்கூடிய, உயிர் - சன்மமானது, பிறிது இல்லை - வேறு இல்லை.

மாதர்களது மனத்தினுள் மூண்ட காமத்தீயானது அடங்கமாட்டாமல் வெளியெழுந்து திரண்டதே திங்களென லாயிற்று எனக் கவி சமர்த்திக்கின்றார். மாதரிற் சிலர் இக் குமரர்களைக் கண்டவளவில் தம் நிறையையும் நாணையுந் துறந்தவராயினர். ஆயினும், விளைந்த காமம் பெரியதேனும் தமக்குரிய நாணத்தை விடாமல் காத்திருந்த மாதர்களும் சிலர் இருந்தனர். இன்னவர்களுங்கூட ஊழித்தீயெனச் சுட்ட நிலாச் சுடர்க்கு உடைந்து தாம் காத்திருந்த நாணத்தை இறுதியில் விட்டுவிட்டனர். அப்படியும் விடாது நாணத்தில் தலைநின்றமாதர் எவரேனும் அங்கு இருப்பாராயின் அவர்களைவிடப் பெருமையுடைய பிறவி வேறு இலது—என்பது இச்செய்யுளின் கருத்து. அத்தகைய மாதர் மிகச்சிலரேனும் போதனநகரின் கண் இருந்திருக்கலாமாதலின். அன்னவர்களைக் கவியிங்கு வியந்து புகழ்ந்தபடியாகும். அல்லது, அப்படி ஒருத்தியும் இல்லாததால், குமாரர்களது கடக்கரும் அழகைக் குறித்தபரிசு இப்பாசுரம் என்றுங் கொள்ளலாம்.

---

83. திருவளர் செல்வர்மேற் சென்ற சிந்தைநோ
யொருவரி னொருவர்மிக் குடைய ராதலா
லுருவளர் கொம்பனா ருள்ளங் காய்வதோ
ரெரிவளர்த் திடுவதோ ரிளமை யெய்தினர். 15.

திருவளர் - அழகினோடு வளர்கின்ற, செல்வர் மேல்-இந்தக் குமரர்கள்மீது, சென்ற - நாடிய, சிந்தை நோய் - மனத்தின் காமநோயானது, ஒருவரின்-(மாதர்களில்) ஒருத்தியைக்காட்டிலும், ஒருவர் - ஒருத்தி, மிக்கு - அதிகமாக, உடையர் ஆதலால் - உடையவர்களானபடியினால், உரு - அழகு, வளர் - மிகுகின்ற, கொம்பு அனார் - பூங்கொம்புபோன்ற மாதர்களின், உள்ளம் - மனத்தை, காய்வது ஓர் - காய்கின்ற ஒரு, எரி - நெருப்பை, வளர்த்து இடுவது ஓர் - வளர்ப்பதற்குரியதாகிய ஒரு, இளமை- இளமைப்பருவத்தை, எய்தினர் - அக்குமாரர்கள் அடைந்தனர்.

"வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோய், எரிவளைத் திடுவதோர் இளமை எய்தினர்" என்று முன், 78-வது செய்யுளிற் கூறியதை நான்கு செய்யுள்களில் விளக்கி, மீண்டும் இச்செய்யுளில், "உருவளர் கொம்பனார் உள்ளங் காய்வதோர் எரிவளர்த் திடுவதோர் இளமை எய்தினர்,' என முடிக்கின்றார் கவி.

ஸ்ரீமத் உ. வே. பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்காசாரியர் ஸ்வாமி அருளிய உரைப் புத்தகங்கள்.

முதலாயிரம்.

3-வால்யூம்களாககாலிகோபயிண்டு விலை	ரூ.	10	0	0
முதலாயிரம் 6-வால்யூம்: திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி	,,	3	0	0
திருப்பாவை	,,	1	4	0
நாச்சியார் திருமொழி	,,	1	12	0
பெருமாள் திருமொழி	,,	1	8	0
திருச்சந்த விருத்தம்	,,	1	8	0
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி அமலனுதிபிரான், கண்ணி நுண் சிறுத்தாம்பு	,,	1	4	0

2-வது ஆயிரம்

பெரிய திருமொழி (1, 2 பத்துக்கள்)	ரூ.	3	0	0
,, (3, 4, 5 ,,)	,,	3	8	0
,, (6, 7, 8 ,,)	,,	3	8	

3-வது ஆயிரம் (இயற்பா)

பெரிய திருமொழி (9, 10, 11 பத்துக்கள்) அச்சில்.				
முதல் வால்யூம் (1,2,3,4 திருவந்தாதிகள்	ரூ.	4	8	0
2-வது (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி)	,,	4	0	0
3-வது (திருவெழுக்கூற்றிருக்கை திருமடல்கள், இராமாநுச நூற்றந்தாதி)	,,	3	0	0
இராமாநுச நூற்றந்தாதி	,,	1	0	0
ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரம்	,,	1	0	0
ஸ்ரீவசந பூஷண ஸாரம்	,,	1	4	0
கூரத்தாழ்வான் வைபவம்	,,	0	4	0
ஸ்ரீ முகுர்த மாலை	,,	0	6	0

திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை ஆபீஸ்,
32, பந்தர் தெரு, மதராஸ்.

யாப்பிலக்கணம்

சீர்—தளை

[154-வது பக்கத் தொடர்ச்சி]

சீர்.

நான்கு அசைகள் ஒன்றுய்ச் சேர்ந்து அமைந்த சீர்களும் சில செய்யுள்களில் வருவது இயலும். எனினும், நாலசைச் சீர்கள் அத்துணைச் சிறப்புடையனவல்ல. சிறப்பில்லாதவைகளைப் பொதுவானவை என்று குறிக்கின்ற வழக்கிற்கிணங்கி, நாலசைச் சீர்களைப் பொதுச்சீர் என அழைப்பர். சிறப்பில்லாச் சனங்களைப் பொதுமக்கள் எனக் கூறுங் கொள்கை இதற்குச் சான்ருகும்.

இரண்டு அசைகள் உடையது இயற்சீர். ஆதலின் இரண்டு இயற்சீர்கள் ஒன்றுய்க் கூடினுல் ஒரு நாலசைச்சீர் ஆதல்வேண்டும். நேர் நிரை என்னும் இரண்டு அசைகளும் சேரவல்ல முறைகளை நோக்கி இயற்சீர் நான்குவிதம் ஆவதிலிருந்து, இந்த நான்குவகை இயற்சீர்களும் முன்பின்னுக மாறிமாறிச் சேர்வதால் பொதுச்சீர் பதினன்கு வகைப்படுதல் தெரிபவரும்.

ஒவ்வொருவகை இயற்சீரிேைடும் நால்வகை இயற்சீரும் தனித்தனி சேரவல்லதாகையால், பொதுச்சீர் நானன்கு பதினறு ஆகின்றது. அல்லது மூவசைச் சீர்களாகிய உரிச்சீர்களிலிருந்தும் நாலசைச் சீர்கள் பிறக்கக் கொள்ளலாம் உரிச்சீர் எட்டு; இவ்வெட்டின் இறுதியிலும் தனித்தனி நேர்அசை ஒன்றையும் நிரைஅசை யொன்றையும் சேர்ப்பதால் பொதுச்சீர் எட்டிரண்டு பதினறு என்று ஆவதும் இயலும்.

அந்தரதுந்துபி, என்பது ஒரு நாலசைச் சீர். இதனிலுள்ள அசைகள், அந்-தர-துந்-துபி, என்பன. இதனை இரண்டு கூவிளஞ்சீர்கள் கொண்டதென்றேனும், அல்லது கூவிளங்காய்ச் சீரின் ஈற்றில் ஒருநிரையசை சேர்ந்த தென்றேனும் எண்ணலா மன்றே. ஆகையால்—நேர் நேர் நேர் நேர், நேர் நேர் நிரை நேர், நேர் நிரை நேர் நேர், நேர் நிரை நிரை நேர், நிரை நேர் நேர் நேர், நிரை நிரை நிரை நேர், நிரை நிரை நேர்நேர், நிரை நேர் நிரை நேர், என நேரீற்றசையால் எட்டு வகையும், நிரை நிரை நிரை நிரை, நிரை நிரை நேர் நிரை, நிரை நேர் நிரை நிரை, நிரை நேர் நேர் நிரை, நேர் நிரை நிரை நிரை, நேர் நேர் நிரை நிரை, நேர் நேர் நேர் நிரை, நேர் நிரை நேர் நிரை, என நிரையீற்றசையால் எட்டுவகையும் ஆகிப் பொதுச்சீரென்னும் நாலசைச்சீர் பதினறு வகைகளில் அமையஇயல்கின்றது.

இயற்சீர் உரிச்சீர்களைப் போலவே பொதுச்சீரிற்கும் வாய்பாடுகள் உள. நான்கு அசைகளில் முதலிரண்டு அசைகளுக்கும், தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்னும் இயற்சீர்களுக்குரிய வாய்பாடுகளையே வைத்துக்கொண்டு, பின்னிரண்டு அசைகளும், நேர்நேர் ஆயின் தண்பூ என்றும், நேர்நிரையாயின் தண்ணிழல் என்றும், நிரைநே ராயின் நறும்பூ என்றும், நிரைநிரை யாயின் நறுநிழல் என்றும் சொற்களைச் சேர்த்துக்கொள்வதால் பொதுச்சீர் பதினறிற்கும் தக்க வாய்பாடு ஏற்படும்:—

சீர்	உதாரணம்	வாய்பாடு
நேர் நேர் நேர் நேர்	அங்கண்வானம்	தேமாந்தண்பூ
நேர் நேர் நிரை நேர்	கள்வார்குழல்தாழ்	தேமாநறும்பூ
நேர் நிரை நேர் நேர்	விண்மதியீதோ	கூவிளந்தண்பூ
நேர் நிரை நிரை நேர்	தேன்மொழிதருசொல்	கூவிளநறும்பூ
நிரை நேர் நேர்நேர்	முகில்போற்கூந்தல்	புளிமாந்தண்பூ
நிரை நிரை நிரை நேர்	மதிதவழ்வரைமேல்	கருவிளநறும்பூ
நிரைநிரைநேர்நேர்	எழில்மிகுபாவாய்	கருவிளந்தண்பூ
நிரைநேர்நிரைநேர்	குயில்போன்மொழியாய்	புளிமாநறும்பூ
நிரை நிரை நிரை நிரை	கொதிதிரையெறிகடல்	கருவிளநறுநிழல்
நிரை நிரை நேர் நிரை	கலைபலகற்றவர்	கருவிளந்தண்ணிழல்
நிரை நேர் நிரை நிரை	மதியோவிதுவென	புளிமாநறுநிழல்
நிரை நேர் நேர் நிரை	கயல்போற்கண்ணினை	புளிமாந்தண்ணிழல்
நேர் நிரை நிரைநிரை	காண்டகுசிறப்புடை	கூவிளநறுநிழல்
நேர் நேர் நிரை நிரை	என்னைமதிப்பிது	தேமாநறுநிழல்
நேர் நேர் நேர் நிரை	நீள்வான்செல்மதி	தேமாந்தண்ணிழல்
நேர்நிரைநேர்நிரை	கன்மொழிநன்மலர்	கூவிளந்தண்ணிழல்

பொதுச்சீர் பதினறில் பதினைந்து வந்துள பாட்டொன்று, முன் (1929-வது ஆண்டு) இவ்விதழ்களில் பதிப்பித்துள்ள 'மாறன் பாப் பாவினம்' என்னும் நூலினுள் காணலாம். அதனை இங்கு எடுத்து எழுதுவோம்:—

பைம்பொற்குன்றே பணையிளவனமுலை
அம்புத்துணையே யரிமதருண்கண்
குனிசிலையிரண்டே கொடுநன்புருவம்
பனிமாமதியே பழிதீர்நன்முகம்
கொடியேதளரிடை கொண்மூவேகுழல்
ஆடரவின்பட மாமேகடிதடங்
காந்தளந்துணைமல ரவையேகையும்
பூந்தளிரன்றே புடைபெயர்மெல்லடி
நண்பா
படர்புகழ் மாறன் பராங்குசன்
துடரிவண் பொழிலே தோகைய திடனே.

[காதல்நோயுற்று வருந்திய ஒரு தலைமகனை நோக்கி, "உனக்கு இந்த மையல் ஊட்டியவள் எத்தகையவள், எங்கு உளள்" என வினவிய நண்பனுக்குத் தலைமகன் இயல்இடம் கூறி எதிருரைத்தது இது. இதன் பொருள்:-நண்பா, பருத்த இளமையும் அழகும் பொருந்திய அவள் முலைகள் பசும் பொன்மலைகளே. செவ்வரிபடர்ந்து மதர்த்து மையுண்ட அவள் கண்களிரண்டும் இரண்டு அம்புகளே. வளைந்த அழகிய அவள் புருவங்கள் இரண்டும், இரண்டு வளைந்த வில்களோ. பழிப்பற்ற அவளது அழகியமுகம், குளிர்ந்த முழுச் சந்திரனே. அவளது துவளும் இடைப்பு பூங்கொடியே. அவளது கூந்தல் மேகமே. அவள் இருகைகளும் இரண்டு காந்தள் மலர்களே. அவள் நடக்கின்ற மெல்லிய அடிகள் பூந்தளிர்களே—அந்தத் தோகைபோல்பவள் வைகுமிடமும், பரந்த புகழுடைய மாறன் பராங்குசனது துடரி என்னுமிடத்திலிருக்கும் வளப்பம்பொருந்திய பூஞ்சோலை யாகும்]

இச்செய்யுளிலுள்ள சீர்களை ஒவ்வொன்ருக எடுத்து அதன் வாய்பாட்டை வரைந்து காட்டுவோம்:—

பைம்பொற்குன்றே	—	தேமாந்தண்பூ
பணையிளவனமுலை	—	கருவிளநறுநிழல்
அம்புத்துணையே	—	தோமாநறும்பூ
அரிமதருண்கண்	—	கருவிளந்தண்பூ
குனிசிலையிரண்டே	—	கருவிளநறும்பூ
கொடுநன்புருவம்	—	புளிமாநறும்பூ }
பனிமாமதியே	—	புளிமாநறும்பூ }
பழிதீர்நன்முகம்	—	புளிமாந்தண்ணிழல்
கொடியேதளரிடை	—	புளியாநறுநிழல்
கொண்மூவேகுழல்	—	தேமாந்தண்ணிழல்
ஆடரவின்பட	—	கூவிளந்தண்ணிழல்
மாமேகடிதடங்	—	தேமாநறுநிழல்
காந்தளந்துணைமல	—	கூவிளநறுநிழல்
ரவையேகையும்	—	புளிமாந்தண்பூ
பூந்தளிரன்றே	—	கூவிளந்தண்பூ
புடைபெயர்மெல்லடி	—	கருவிளந்தண்ணிழல்
நண்பா	—	தேமா
படர்புகழ்	—	கருவிளம்
மாறன்	—	தேமா
பராங்குசன்	—	கருவிளம்
துடரிவண்	—	கருவிளம்
பொழிலே	—	புளிமா
தோகைய	—	கூவிளம்
திடனே	—	புளிமா

ஆதலின், இச்செய்யுளில் கூவிளநறும்பூ, என்னும் வாய்பாடுடைய நாலசைச் சீர் வந்திலது. பனிமாமதியே, என்பதைப் 'பானிறமதியே' என மாற்றிக் கொண்டால், அச்சீரும் வந்ததாகும்.

தளை

அசைகள் சேர்ந்து சீர்கள் ஆகும் விதங்களைக் கண்டோம். இனி இச்சீர்கள், செய்யுளடிகளில் எவ்வாறு தோடர்கின்றன என்பதைக் கற்கவேண்டும். செய்யுளின் ஓசையமைப்புப் பெரும்பாலும் இச்சீர்கள் ஒன்றையொன்று தொடர்ந்துவரும் முறையைப் பொருந்தியிருக்கின்றது. ஒருசீர் அதற்கு அயல்வரு சீரோடு சார்ந்து நிற்கின்ற முறையினைத் தளையென்று கூறுவர்.

தொடரிலக்கண புணரிலக்கணங்களைக்கற்கும்போது நிலைமொழி வருமொழியெனப் பேசுவதுபோல இங்கும், நிலைச்சீர் வருஞ்சீர் என்று கூறிக்கொள்ளலாம். தளைகள், நிலைச்சீரின் தன்மையையும் வரிஞ்சீரின் முதலிலுள்ள அசையையும் பற்றி அமைகின்றன.

செய்யுளில் (முதற்சீரும் இறுதிச்சீரும் தவிர) ஒவ்வொரு சீரும் அதற்குப் பின்வரும் சீரைக் கருதுங்கால் நிலைச்சீராகவும், அதற்கு முன்சென்ற சீரைக் கருதுங்கால் வருஞ்சீராகவும் கொள்ளப்படுகின்றது. ஒருசீர் நிலைச்சீராக இருக்கும்போது, அது இயற்சீரோ உரிச்சீரோ பொதுச்சீரோ என்பதை அறிவதுடன் அதனிறுதியிலிருக்கும் அசை நேரசையா நிரையசையா என்பதையுங் கருதவேண்டும். வருஞ்சீராயிருக்கும்போது அதன் முதலில் இருக்கும் அசை நேரசையா நிரையசையா என்பதைமட்டும் நோக்கினுற்போதும். அப்படி நோக்குங்கால், நிலைச்சீர் ஈற்றிலும் வருஞ்சீர் முதலிலும் ஆகிய இரண்டிடத்தும் நேரசையே இருக்கலாம், அல்லது நிரையசையே இருக்கலாம், அல்லது ஒன்று நேரசையும் மற்றது நிரையசையுமாக இருக்கலாம். இதனேடு நேரசையேனும் நிரையசையேனும் ஈற்றில் பெற்று நிலைச்சீராய் நிற்கின்ற சீர் இயற்சீராகவேனும் உரிச்சீராகவேனும் பொதுச்சீராகவேனும் இருக்கலாம். தளைகளின் தன்மையும் பெயரும் இவைகளைப் பொருந்தியிருக்கின்றன.

ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, எனச் சிறப்புடைய பாக்கள் நான்கு ஆவதற்கிணங்க, பெரும்பாலும் அவ்வப் பாக்களுக்கு உரித்தாகித் தளைகளும், ஆசிரியத்தளை, வெண்டளை, கலித்தளை, வஞ்சித்தளை என நான்கு வகையன.

1. ஆசிரியத்தளை.

வருஞ்சீர் யாவதாயினும், நிலைச்சீர் இயற்சீராயிருக்க வேண்டியது ஆசிரியத்தளை அமைவதற்கு அவசியம். நிலைச்சீர் இவ்வண்ணம் இயற்சீராயிருக்க அதன் ஈற்றசை நேரசையா யிருக்குமாயின் வருஞ்சீரின் முதலசையும் நேரசையாகவும், நிலைச்சீரின் ஈற்றசை நிரையசையாமாயின் வருஞ்சீரின் முதலசையும் நிரையசையாகவும் சார்ந்து வருவது ஆசிரியத்தளை எனப்படும்.

கண்டார் கொல்லோ, என இரண்டு சீர்கள் தொடருமாயின், கண்டார் என்னும் நிலைச்சீர் இயற்சீராயிருப்பதாலும், அதன் ஈற்று அசையாகிய டார் என்பதும், கொல்லோ, என்னும் வருஞ்சீரின் முதலசையாகிய கோல் என்பதும் நேரசைகளாக இருப்பதாலும் இவ்விருசீர்களும் ஆசிரியத்தளை ஏற்று நிற்கின்றன.

கண்டா ருய்வாரோ —என இரண்டு சீர்கள் தொடருமாயினும் ஆசிரியத்தளையே. ருய்வாரோ, என்னும் வருஞ்சீர் ஈரசைச்சீரன்று (அது வெண்பா உரிச்சீரென்னும் காய்ச்சீராகிய மூவசைச்சீர்). எனினும், கண்டா என்னும் நிலைச்சீர் இயற்சீராய் இருக்க அதன் இறுதியிலும் வருஞ்சீர் முதலிலும் நேரசைகளே ஒன்றியிருத்தலால், ஆசிரியத்தளை என்ன வேண்டும்.

[இவ்வாறன்றி, உய்வாரோ கண்டார், என மாறியிருக்குமெனின் ஆசிரியத்தளை அமையாது. ஏனெனின், உய்வாரோ, என்னும் நிலைச்சீர் இயற்சீர் அன்றே. ஆதலின், இங்கு நிலைச்சீர் இறுதி வருஞ்சீர்முதல் ஆகிய ஈரிடத்திலும் நேரசையே நின்றாலும் இது ஆசிரியத்தளை ஆகாது.]

இப்படியே, நிலைச்சீர் இயற்சீராயிருக்க அதன் ஈற்றில் நிரையசை நிற்குமாயின், வருஞ்சீர் (அது எதுவாயினும்) முதலிலும் நேரசை வர, ஆசிரியத்தளை அமையும்:—

திரையெறி கடலோ,-என இரண்டு சீர்கள் சார்ந்து வருங்கால், நிலைச்சீர் நிரையசையை ஈற்றிலுடைய இயற்சீராக, வருஞ்சீர் முதலிலும் நிரையசை நிற்றலால் ஆசிரியத்தளை அமைகின்றது.

ஆர்கலி யுலகத்து—இதனில், வருஞ்சீர் மூவசைச் சீராயினும் நிலைச்சீர் ஈரசைச் சீராயிருக்க அதன் இறுதியிலும் வருஞ்சீர் முதலிலும் நிரையசைகளே ஒன்றியிருப்பதால், இதுவும் ஆசிரியத்தளையே.

[இவ்வாறின்றி,—மதிபொழிதரு நிலவொளி-என நிற்குமாயின், நிலைச்சீர் மூவசைச்சீராகையால், வருஞ்சீர் ஈரசைச் சீரா யிருந்தபோதிலும், நிலைச்சீர் இறுதி வருஞ்சீர் முதல் ஆகிய ஈரிடத்தும் நிரையசைகளே ஒன்றியிருப்பினும், ஆசிரியத்தளை ஆகாதவாறு அறிக]

நிலைச்சீர் இயற்சீராயினும், அதன் ஈற்றசையும் வருஞ்சீர் முதலசையும் வேறுவேருகி ஒன்ருமற் போமெனின் ஆசிரியத்தளை ஆகாது.

கண்டனன் வேந்தன்
உரைத்த வரசன்

இவை நிரைமுன்நேரும் நேர்முன்நிரையு மாகி ஒன்றுதல் இன்றி விகற்பித்து வந்திருத்தலால், ஆசிரியத் தளைகள் ஆகா.

ஆதலால், ஆசிரியத்தளை அமைவதற்கு அவசியமான நிபந்தனைகள் இரண்டு:—

i. நிலைச்சீர் இயற்சீராகவே இருக்கவேண்டும்.

ii. நிலைச்சீர் ஈற்றசையும் வருஞ்சீர் முதலசையும் ஒன்றியிருத்தல் வேண்டும்.

இந்த இரண்டு நிபந்தனைகளும் ஒன்றுசேர்ந்தாலல்லது ஆசிரியத்தளை யில்லை. இவ்விரண்டு நிபந்தனைகளும் இணங்கிவிடுமாளுல், பிறகு வருஞ்சீர் எதுவென்ருகிலும், நிலைச்சீர் வருஞ்சீர்களி லுள்ள மற்ற அசைகள் எவை என்ருயினும் கருதவே வேண்டியதில்லை.

ஆதலால் வாய்பாட்டால் குறிக்குமிடத்து, கீழ்வரும் வகைகளில் சீர்கள் தொடர்கின்ற போதெல்லாம் விளைவது ஆசிரியத்தளையே:—

	நிலைச்சீர் +	வருஞ்சீர் =	தளை
ஆசிரியத் தளை	தேமா அல்லது புளிமா	தேமா கூவிளம் தேமாங்காய் கூவிளங்காய் தேமாங்கனி கூவிளங்கனி	நேர் ஒன்றிய ஆசிரியத் தளை
	கருவிளம் அல்லது கூவிளம்	புளிமா கருவிளம் புளிமாங்காய் புளிமாங்கனி கருவிளங்காய் கருவிளங்கனி	நிரை ஒன்றிய ஆசிரியத் தளை

[நாலசைச் சீர்களை இங்குக் காட்டவில்லை]

மேற்காட்டிய குறிப்பினின்று ஆசிரியத்தளை இரண்டுபிரிவுகள் உடையதாவது புலப்படும்:—

i. நிலைச்சீர்இறுதி வருஞ்சீர்முதல் ஆகிய ஈரிடத்தும் நேரசையே நிற்குமாளுல் அதனை நேரொன்றிய ஆசிரியத்தளை என அழைப்பர்.

ii. நிலைச்சீர்இறுதி வருஞ்சீர்முதல் ஆகிய ஈரிடத்தும் நிரையசையே நிற்குமாளுல், அதனை நிரையொன்றிய ஆசிரியத்தளை யென அழைப்பர்.

குறிப்பு:—வருஞ்சீர் எதுவாயிருப்பினும் நிலைச்சீர் இயற்சீராயிருத்தல் மட்டுமே ஆசிரியத்தளை அமைவதற்குப் போதுமெனினும், வருஞ்சீரும் இயற்சீராயிருக்குமாயின், அது சிறப்புடை ஆசிரியத்தளை யாகும். அல்லதெனின், சிறப்பி லாசிரியத்தளை யாகும்.

அப்பர்

அப்பரும் அறுபத்திஞன்கு கலைகளும்.

20. கட்க ஸ்தம்பனம்

[147-வது பக்கத் தொடர்ச்சி]

அத்திர நயனிதொன் மலைமகள் பயனுறு மதிசயச்
சித்திர மணியணி திகழ்முலை யிணையொடு செறிதலின்
புத்தரொ டமணர்பொய் பெயருநள் ளாறர்தம்நாமமே
மெய்த்திரளொரியினிவிடிவிலைபழுதிலைமெய்ம்மையே
—சம்பந்தர்.

இக்கலையின் அமைதி

கட்கமென்பது தமிழில் படைக்கலமெனப்படும். படை யென்றும் வழங்குவர். சேனைகளான படைகள் உபயோகிக்கும் ஆயுதங்களைப் படையென்பது ஆகுபெயர்போலும். எதிரியைப் படும்படி செய்வதும் படையென்னலாம். தமிழில் படையென்றே, தேவாரத்தில் முக்கியமாய் வழங்குவதால், இக்கலைக்குப் படைகட்டு வித்தை யெனினும் பொருந்தும். இருவகைப் படைகளும் செய்யக்கூடிய காரியம் யாவை யென்பது அப்பர் திருவாக்கால் விளக்கலாம்.

படைகள்போல் வினைகள் வந்து
பற்றியென் பக்க னின்றும்
விடகிலா வாத லாலே
விகிர்தனை விரும்பி யேத்தும்
இடையிலே னென்செய் கேனு
னிரப்பவர் தங்கட் கென்றும்
கொடையிலேன் கொள்வ தேநான்
கோவல்வீ ரட்ட னீரே.
திருக்கோவலூர் வீரட்டம் - திருநேரிசை 7.

சிவபெருமான் தன் திருநாமத்தை ஓதுவார்மீது எவ்வகைப் படைக்கலமும் தாக்காதென்பது மேலோர் துணிவு. அந்தியகாலத்தில் நமன்வந்து காலபாசத்தை வீசி நிற்பினும் அப்பாசம் பயனற்று நிற்கச்செய்வது சிவத்தியானமாகும். யமதூதரை நோக்கி, சிவனடியார்களிடம் செல்லற்க, என்று திருநாவுக்கரசு கூறுவது காண்க:—

படையும் பாசமும் பற்றிய கையினீர் !
அடையன் மின்நம தீசன டியரை;
விடைகொ ளூர்தியி னடி யார்குழாம்
புடைபு காதுநீர் போற்றியே போமினே !
காலபாராயணம் - திருக்குறுந்தொகை 7.

இன்னங் கேண்மி னிளம்பிறை சூடிய
மன்னன் பாத மனத்துட னேத்துவார்
மன்னு மஞ்செழுத் தாகிய மந்திரந்
தன்னி லொன்றுவல் லாரையுஞ் சாரலே!

மற்றுங் கேண்மின் மனப்பரிப் பொன்றின்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு கோவணம்
ஒற்றை யேறுடை யானடி யேயல்லாற்
பற்றொன் றில்லிகண் மேற்படை போகலே!
ஷை - 9 . 10.

இவ்வாறு கூறுதல் அப் பதிகத்தின் இரண்டாம் பாசுரத்தில் கண்டிட்டவாறு, இவர்கள்மீது உங்கள் படைக்கலஞ் சென்று யாதொரு * இடுக்கணும் விளைவிக்கா தாகையால் கொன்னே அவரிடம் செல்லற்க வென்பதாம்.

இத்தகைய உறுதிபெற்ற அப்பர்தான் அமணர்களால் ஏவப்பட்ட எவ்வகை யிடுக்கணுக்கும் அஞ்சாது நின்றனர். நிரம்புகெடிலப் புனலுடைய திருவதிகை வீரட்டானக் கூத்தருக்கன்றி யான் எதற்கும் அஞ்சேனென்று பதிகம் பாடவும் சமணர் அனுப்பிய யானை வெருண்டு ஏவிய சமணர்மீது பாய்ந்து அவர்களையே கொன்றதென்று பெரியபுராண வாயிலாய்க் காணலாம்.

அதற்குத் திருநாவுக்கரசுநாயனுர் தேவாரத்திலும் அகச்சான்றுகள் பல உள†:—

மலையே வந்து வீழினு மனிதர்காள் !
நிலையி னின்றீர் கலங்கப் பெறுதிரேல்,
தலைவ னாகிய வீசன் றமர்களைக்
கொலைகை யானையும் கொன்றிடு கிற்குமே ?
தனித் திருக்குறுந்தொகை. 5.

இதற்குக் காரணமும் அப்பர் திருவாய்மலர்ந் தருளியது காண்க:—

சாற்றச் சொல்லுவன் கேண்மின் றரணியீர்!
ஏற்றின் மேல்வரு வான்கழ லேற்றினுற்
கூற்றை நீக்கிக் குறைவறுத் தாள்வதோர்
மாற்றி லாச்சொம்பொன் னவர்மாற் பேறரே.

ஐய னேயர னேயென் றாற்றினுர்
உய்ய லாமுல கத்தவர் பேணுவார்
செய்ய பாதமி ரண்டுநி னையவே
வைய மாளவும் வைப்பர்மாற் பேறரே.
திருமாற்பேறு - திருக்குறுந்தொகை.

சிவனடியா ருள்ளத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு வீற்றிருப்பதால், அவ்வடியார்மீது யாதொரு படைக்கலமும் அவர் இஷ்டமின்றிச் செலுத்தமுடியாதென்பது திண்ணம்.

இக்கலையின் நிகழ்ச்சி

படைக்கலத்தால் மாள்பவர் சிலரெனில் பயத்திஞல் மாள்பவர் பலராம். அதற்கு அத்தாட்சி, ஒரு வேடனுனவன் பறவைக்கூட்டத்தினிடையே யுள்ள ஒரு பட்சியை வெடிமருந்தாற் சுடுவனுயின் அம்மருந்துபட்டு இறப்பது ஒரு பறவையாயினும், பயத்தால் இறப்பன பல. ஆகையால் பயமின்றி நிற்பதே பகைவன் படைக்கலத்தைக் கட்டியதொக்கும்.

வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடற
நெஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலா
மஞ்ச லென்றிடு மானைக்கா வண்ணலே.
திருவானைக்கா - திருக்குறுந்தொகை 5.

இரண்டாவது, எதிரி குறியின் நிலையறியாது தடுமாறச் செய்வதாம். சிவனடியார் சொரூபத்தால் எதிரியானவன் தான் கடவ வேண்டுமென்றெண்ணும் பொருள் இதனல் தடைப்பட்டு நிற்கும். இதை உருவகப்படுத்தி அப்பர் உணர்த்துவது காண்க:—

தாரித் திரந்தவி ராவடி யார்தடு
மாற்றமென்னு
மூரித் திரைப்பவ்வ நீக்குகண் டாய்முன்னை
நாளொருகால்
வேரித்தண் பூஞ்சுட ரைங்கணை வேள்வெந்து
வீழச்செந்தீப்
பாரித்த கண்ணுடை யாயெம்மை யாளும்
பசுபதியே.
பசுபதி - திருவிருத்தம். 3.

இராவணன் திருக்கயிலாயத்தின் பக்கத்தில் ஆகாயத் தேரை நடத்தும்போது அது செல்லாது தடைப்பட்டதும் ஒருவகைக் கட்கஸ்தம்பனமே யாகும்.

கடவுந் திகிரி கடவா
தொழியக் கயிலையுற்றுன்
படவுந் திருவிர லொன்றுவைத்
தாய்பனி மால்வரைபோல்
இடபம் பொறித்தென்னை யேன்றுகொள்
ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுட் டுங்கானை
மாடத்தெந் தத்துவனே.
திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம் 10.

இத்தகைய பரமன் சக்தியானது அவனை நித்தலும் வழிபடுதலும் சிந்தித்தலும் செய்கின்ற அடியாரைச் சூழ்ந்துநிற்பதால் யாதும் அவர்களுக்கு இன்னல் விளைவதில்லை.

மேவித்து நின்று விளைந்தன
வெந்துயர்த் துக்கமெல்லா
மாவித்து நின்று கழிந்தன
வல்ல லவையறுப்பான்
பாவித்த பாவனை நீயறி
வாய்பழ னத்தரசே
கூவித்துக் கொள்ளுந் தனையடி
யேனைக் குறிக்கோள்வதே.
திருப்பழனம் - திருவிருத்தம் 1.

வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தார்
விஞ்சை யிற்செல்வப் பாவைக்கு வேந்தனுர்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க் கருளுநள் ளாறரே.
திருநள்ளாறு - திருக்குறுந்தொகை 7.

* நடுக்கத் துள்ளு நகையுறு நம்பர்க்குக்
கடுக்கக் கல்லவ டயிடு வார்கட்குக்
கொடுக்கக் கொள்க வெனவுரைப் பார்களை
யிடுக்கண் செய்யப் பெறீரிங்கு நீங்குமே.
காலபாராயணத் திருக்குறுந்தொகை.

† மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைக் கண்டீர்கட வூரரே.
திருக்கடவூர் - திருக்குறுந்தொகை.

* களங்குளிர்ந் திலங்குபோது காதலானு மாலுமாய்
வளங்கிளம் பொனங்கழல் வணங்குவந்து காண்கிலார்
துளங்கிளம் பிறைச்செனித் துருத்தியாய் திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலா முகந்துகந் துரைப்பனே.
—சம்பந்தர்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[155-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

நிலைப்புலன்

நாம் நடந்து செல்லும்போதும் ஓரிடத்தில் இருக்கும்போதும் சிறிது நிலைபிறழ்ந்தால் கீழே விழுவோம். நேர்நிலை யீராழியில் (Cycle) ஏறிச் செல்லும்போதும் நீந்தும்போதும் நாம் அதற்கேற்ற நிலையில் இருக்கின்றோம். சிறிது நிலைபிறழ்ந்தாலும் அவ்வேற்றுமை புலனாய்விடுகின்ற தல்லவா? நிலையாய் இருப்பதனையும், நாம் இயங்குவதனையும், நிலைபிறழ்வதனையும் அறிவதற்கு வாயிலாக இருப்பதனை நிலைப்புலன் என வழங்கலாம் (Static Sense). இதற்கேற்ற புலப்பொறி எங்குள்ளது? அகச்செவியில் புரிமுடியினை அடுத்து மூன்று பிறைவடிவான வளையங்கள் இருக்கின்றன எனக் கண்டோம் அன்றோ? அவைகளே நிலைப்பொறி யாகும். அவைதாம் ஒன்றுக்கொன்று நேர் குறுக்காக அமைந்து கிடக்கின்றன. ஒன்று நீள நிலையிலும், ஒன்று அகல நிலையிலும், ஒன்று உயர நிலையிலுமாக நின்று அவை மூன்று இடநிலையையும் குறித்து நிற்கின்றன. இடநிலைகள் இம்மூன்றல்லது இல்லை யன்றோ? ஒரு பொருள் நீள நிலையில் இருக்கலாம், அகலநிலையில் இருக்கலாம் அல்லது உயரநிலையில் இருக்கலாம். [ஆழமும் உயர நிலையிலேயே அடங்கிவிடுமன்றோ?] இம்மூன்று பிறை வளையங்களும் முருந்து எலும்பினால் ஆகிய குழைகளாகும். அவைநிறைய ஒருவகை நீர்ப்பொருள் ததும்புகின்றது. நாம் தலையைக் கோணலாக இயக்கும்போது, இவ் வளையங்களில் உள்ள நீரும் அசைகின்றது. அவ்வசைவால் வளையத்தில் ஒரு மூலையில் நீர் பாய்ந்து மிகுகின்றது. உயரம் நீளம் அகலம் என்ற மூன்று நிலைகளுக்கேற்றவாறு அவ்வவ்வளையங்களில் நீர் அசைகின்றது. அவைகளில் ஒரு முனையில் நீர்ச்செறிவும் மற்றொரு முனையில் நீர்க்குறைவும் உண்டாவதால் நிலை மாறுதலை உணர்கின்றோம். ஒரு குழையில் நீரை ஊற்றி அதன் இருபுறத்தையும் மூடிக் கவிழ்த்துப் பிடிப்போமானால் தரைக்கருகாகவுள்ள முனையில் நீர்ச்செறிவு மிகும் அன்றோ. அதே போல இந்த அகச்செவி வளையங்களிலும் தரைக்கு அருகாகவுள்ள முனைகளில், அல்லது நீர்வாட்டமுள்ள முனைகளில், நீர்ச்செறிவு மிகும் என்க. கோணலாகத் தலையை அசைத்தால் இவ்வாறு யாதேனும்ஒரு முனையில் நீர்ச்செறிவு மிகுகின்றது. நேராக அசைத்தாலோ வளையத்தின் இருமுனையிலும் நீர்ச்செறிவு மிகுகின்றது.

பலநாள் வரையிலும் இவ்வளையங்களைச் செவிப் புலனுக்குப் பயன்படுவன என்று பலர் கருதினர். செவிப்புலனுக்கும் இவற்றிற்கும் ஓ ரியையும் இல்லை என்பது இதுபோது விளங்கிவிட்டது. இவையே நிலைப்புலனைப் பற்றிய பொறி என்பதும் தெளிவாயது. புறாக்களின் அகச்செவி வளையங்களை எடுத்துவிட்டுச் செய்க்காட்சி வகைகளால் அறிஞர்கள் ஆராய்ந்தனர். அவை நிலையாக நிற்கவோ பறக்கவோ முடியாது தடுமாறுவதைக் கண்டனர். இதனால் இவ்வளையங்கள், நிலைப்புலனைப் பற்றியவே யன்றிச் செவிப்புலனைப் பற்றியன வல்லஎன்பது நன்கு விளங்கவில்லையா? நிலைநிற்பதனையும் நிலைமாற்றத்தையும் உயிர்ப்பொருள்கள் அறிந்தாலன்றி அவை இயங்க இயலாது. ஆதலின் இந்நிலைப்புலன் இன்றியமையாச் சிறப்பினதாகும். உயிர்ப்பொருள்களிடையே, முதலில் தோன்றியது நிலைப்புலனேயாகும்; அதற்குப் பின்னரே செவிப்புலன் தோன்றியது.

நிலைமாறுதலை, இவ்வளையங்கள் வழியாக அறிவதோடு நமது தசைகளின் இறுக்கத்தாலும் நெகிழ்ச்சியாலும்கூட அதனை யறிகின்றோம். ஆதலினால் நிலைப்புலனைப் பிரித்தறிவது அருமையாகின்றது. ஐம்புலன் என்று வகை செய்தவர்கள் இதனை வேறு பிரியாததும் இதனாலேயே என்க. நீர்ச்செறிவு வளையத்தில் உறுத்தியபோது அதனை ஊற்றுப்புலனாகவே அறிகின்றோம் என, ஊற்றுப்புலனி லடக்கினர் போலும். இது நிற்க.

ஒரு வட்டத்தை (Circle) ஆட்சியில் 360 பிரிவாக (Degree) பிரித்திருக்கின்றனர். ஒவ்வோர் பிரிவையும் ஒவ்வோர் சுழி என வழங்கலாம் (Degree). ஓரிமைப்போதிற்கு இரண்டு சுழி (2°) யாக விரைந்து சுழன்றால் அவ்வியக்கம் நமக்குப் புலனாகின்றது. அதற்கும் குறைவாகச் சுழன்றால் அவ்வியக்கம் புலனாவதில்லை. இப்புலனைத் தூண்டுவது பெரு விசையன்று; விசையின் மிகுதியே யாகும். ஒரே விசையாக நம்மைச் சுற்றினால் அச் சுழற்சிநிலையில் நிலைத்துவிடுகின்றோமாதலின் அவ்வியக்கத்தை நாம் அறிவதில்லை. உலகம் நம்மையும் தூக்கிக்கொண்டு எவ்வளவு விசையாகச் சுழல்கின்றது. அதனை நாம் அறிகின்றோமா? விசையாகச் சுழற்றுகையில், அவ்விரைவை சிறிது குறைக்கவோ மிகவோ செய்தால், அம் மாறுபாட்டை நாம் உணர்கின்றோம். விசையைக் குறைத்தால் எதிர்ப்புறமாகச் சுழல்வதுபோலப் பொய்த் தோற்றம் எழுகின்றதன்றோ?

இந்த நிலைப்புலனும் தசைநார்ப்புலனும் உள்ளமையால்தான் நடத்தல் இயங்குதல் முதலியன பழக்கமாகின்றன.

தசைப்புலன்அல்லது இயக்கப்புலன்:-(Motor sense)தசைகள் இறுகுவதாலும் நெகிழ்வதாலும், இயக்கங்களை அறிகின்றோம் என்றோம். இதனையும் தசைப் புலன் என வேறுபிரித் தாராய்தல் வேண்டும். நமது என்புப்பூட்டுகளிலும், தசைநார்களிலும், என்புக் கட்டுகளிலும் (Tendon எலும்பையும் தசையையும் கட்டுவன) நரம்புக்கள் வந்து முடிகின்றன. பூட்டுகளிலும் தசையிலும் கட்டிலும் நேரிடும் மாறுபாடுகளை அந் நரம்புவழியாக அறிகின்றோம். பூட்டுப்புலன் தசைப்புலன் கட்டுப்புலன் என மூன்றுவகைப்படுத்துவதற்கு இடமில்லை. இம்மூன்றியக்கத்தையும் ஒன்றாக வைத்தே அறிகின்றோம். ஊற்றுப்புலனிலேயே

சேர்த்து அடங்காதோ என்றால் அடங்காதென்க. சிலர்க்கு நோயினால் பிறர் தம்மைத்தொடுவதை அறியமுடியாமற் போய்விடுகின்றது. அவர் சூடும் குளிர்ச்சியும் அறியாமல் கிடக்கின்றனர். இவ்வாறு ஊற்றுப்புலன் கெட்டு நிற்பவர்களும் தசைப்புலன் கெடாது வாழக் காண்கின்றோம். அவர்கள் தமது தசைகள் இயங்குவதை அறிகின்றனர். ஆதலின் இதனை ஊற்றுப் புலனில் அடக்கிவிடுதற் கியலாது. விரலையோ, நாக்கையோ கண்ணுருண்டையோ அசைத்துப் பார்ப்போமானால், இயக்கத்தினை உணர்த்தும் இப்புலன், ஊற்றுப்புலனினும் வேறென்பதனை நன்கு உணர்வோம். அழுத்தம் தொடுகை என்ற இவற்றினும் வேறாகிய முயற்சி, வருத்தம், இயக்கம் என்பவற்றை உணர்கின்றோமன்றோ?

வரித்தசை (Striped muscles) இயக்கங்களால் இப்புலன் எழுகின்றது. நம்முறுப்புக்கள் எங்கிருக்கின்றன என்பதனை இப்புலன் உணர்த்துகின்றது. தசைகள் இவ்விரண்டாக உள்ளன. அவை ஒன்று நீண்டால் மற்றொன்று குறுகுகின்ற தென்பதுபோல முரண்பட்டுக் கிடக்கின்றன. ஏதேனும் ஒருறுப்பை ஒரு நிலையில் உறுதியாக வைத்தால், முரண்பட்ட தசைகள் சுருங்கி விரிந்து நிற்கின்றன. இந்த இறுக்கமும் நெகிழ்ச்சியும் புலனாகின்றன. அதனால் நமது தசை எவ்வளவு இறுகியுள்ளதென்பதனையும், அவ்வுறுப்பு எந்நிலையில் இருக்கிற தென்பதனையும் அறிகின்றோம். கையைப் பலநிலையில் வைத்தால், அந்நிலை மாறுபாட்டை எவ்வாறு அறிகின்றோம். பொதுவாக கண்ணால்கண்டு கூறுகின்றோம். ஆனால் கண்ணை மூடிக்கொண்டு கையைப் பலநிலையிலும் அமைத்துக் காட்டி அவ்வாறு காட்டும்போதே "இந்த இந்த நிலையில் கையை அமைத்தேன்" எனக் கூறுகின்றதும் கூடுமன்றோ? 'என் கையை நெடுக்காக வைத்திருக்கின்றேன்; குறுக்காக வைத்திருக்கின்றேன். நேராக வைத்திருக்கின்றேன். சாய்வாக வைத்திருக்கின்றேன். வளைவாக வைத்திருக்கின்றேன்' என்று நமது கையின் நிலைகளைக் கண்ணை மூடிக்கொண்டும் கூறலாம் அல்லவா? கையானது நம்முறுப்புக்களில் மார்பையோ வேறெதனையோ தொடுமானால் அவ் வூற்றுப்புலனால் அக்கை அங்கிருக்கின்றது எனக்கூறலாம். அவ்வாறு ஓருறுப்பையும் தொடாதபடி வெள்ளிடையே நீட்டினால் அந் நிலைமாறுபாட்டையெல்லாம் நாம் உணர்வது எங்ஙனம்? இத் தசைப்புலனாலேயே மேற்கூறியவாறு அறிகின்றோம் என்க. கண்மூடிக்கொண்டு, ஏதேனும் ஒருவிரலை ஒருறுப்பிலும் படாவகை நேராக நீட்டிச் சிறிது வளைத்துப் பாருங்கள். அவ்வசைவினையும், அது வலமாக வளைகின்றதா இடமாக வளைகின்றதா என்ற நிலையினையும் நாம் இத் தசைப்புலனால் அன்றோ அறிகின்றோம். கண்முதலிய புலன்களும் ஊற்றுப்புலனும் மேற்சொல்லியவாறு இத்தசைப்புலனுக்குத் துணைசெய்வதையும் காண்க. தொடைமேல் கைபட்டால், கையானது தொடைமேல் இருக்கின்றதென அறிகின்றேன். நடந்து செல்லும்போது கோவிலின் மணிஒலியைக் கேட்கின்றேன். அக்கோவிலின் அருகிற் செல்லச்செல்ல, அவ்வொலி தெளிவாகக் கேட்கிறது. ஒலிவேற்றுமையின் உதவியால் தொலைவிலிருந்து அருகுவந்த இயக்கத்தை உணர்கின்றேன். ஒரு தெருவிலிருந்து வேறு ஒரு தெருவிற் புகுகின்றேன். முன்கண்ட வீடுகளும் காட்சிகளும் மறைந்து வேறு வீடுகளும் காட்சிகளும் காண்கின்றேன். இக் காட்சிவேற்றுமையால் எனது இயக்கத்தை எளிதில் உணர்கின்றேன். எனவே, கட்புலன் செவிப்புலன் ஊற்றுப்புலன் முதலியனவும் ஒருவகையால் நோக்குமிடத்து இயக்கப்புலனாக விளங்குகின்றன. ஆனால் இவை முதனிலை இயக்கப்புலன்கள் அல்ல; தசைப்புலனே அச்சிறப்புடையது. இவைஎல்லாம் துணைநிலை இயக்கப்புலன்கள் எனத் தக்கவை.

கட்புல வேற்றுமை செவிப்புல வேற்றுமைகளை வகைசெய்தமைபோல இயக்கப்புல வேற்றுமையை ஆராய்ச்சியாளர் வகை செய்யவில்லை. நாமே கையை வளைப்பதற்கும், பிறர் நம் கையை வளைப்பதற்கும் உள்ள ஒரு புலவேற்றுமையை அறிகின்றோ மன்றோ. இவற்றைச் சிலர் விளக்கி இருக்கின்றனர். எனினும் தசைப்புலவகையில் வேற்றுமை சிறிதளவே உண்டு. தூக்குதல் தள்ளுதல் முதலிய செய்கைகளை நாம் செய்யும்போது எழுகின்ற புலனைத் தாக்கற்புலன் (Effort) எனவும், நாமொன்றைத் தடுத்து நிற்கும் போது எழுகின்ற புலனைத் தாங்கற்புலன் (Strain) எனவும் களைத்துப்போவதனைக் களைப்பு எனவும் வழங்கலாம். தாக்கலை முயற்சி என்றும், தாங்கலை வருத்தமென்றும் கூறவும் அமையும்.

இப்புலனில் உரத்தின் வேற்றுமை நன்கு தெரிகின்றதல்லவா! "பெரும்பொருளால் தாக்கப்படுகின்றோமா, சிறுபொருளால் நாம் தாக்கப்படுகின்றோமா. பெரும்பொருளைத் தூக்குகின்றோமா சிறுபொருளைத் தூக்குகின்றோமா" என்றெல்லாம் உரத்தின் வேறுபாட்டைக் கூறலாம் அல்லவா? நடுவிரலை (1°) ஒரு சுழி அளவு வளைத்தால் அவ்வசைவு நமக்குப் புலனாகின்றது. அதற்கும் குறைவாக அசைத்தால் புலனாவதில்லை. தசையிறுக்கத்தினை அறிவதால் இப்புலன் அகப்புலனேயாயினும், நாம் தூக்கும் பொருள்களின் எடையையும் அவ்வகையில் அறியத் துணைசெய்வதால் புறப்பொருளின் எடையை யறியும் புறப்புலனாகவும் இத் தசைப்புலன் விளங்குகின்றது.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[152-வது பக்கத் தொடர்ச்சி]

அவல மகன்றிட வாழ்த்திய காட்சிகள்.

கங்குல்முற்றிக் கரைகண்ட செய்தியை யுரைத்தபின் கம்பர், கதிரவன் உதிப்பதன் முன்னே அவ் வயோத்தி நன்னகர் கிளர்ந்தெழுந்த செவ்வியை இனிச் செப்புகின்றாராகின்றார்.

நாம விற்கை யிராம னைத்தொழு
நாள டைந்த நமக்கெலாம்
காம விற்குடை கங்குன் மாலை
கழிந்த தென்பது கற்பியாத்
தாமொ லித்தன பேரி யவ்வொலி
சாரன் மாரி தழங்கலா
மாம யிற்குல மென்ன முன்ன
மலர்ந்தெ ழுந்தனர் மாதரே.

[அச்சத்தைத் தருகின்ற வில்லை ஏந்திய கைகளையுடைய இராமனை அரசனாக வணங்குகின்ற நல்ல நாளை அடைந்திருக்கின்ற தங்களுக்கெல்லாம், காமனது வில் எய்து குடைகின்ற இரவுக்காலம் கழிந்த தென்பதைக் கற்பிப்பது போலப் பேரிகள் ஒலித்தன. அவ்வொலி மலைச்சாரலில் மேகத்தின் முழக்கம்போல் ஆக, அதனைக்கேட்ட சிறந்த

மயிர்கூட்டங்கள் என்ன, மாதர்கள் கண்மலர்ந்து தங்கள் நாயகர்களுக்கு முன்னே எழுந்தனர்]

இனமலர்க்குலம் வாய்வி ரித்திள
வாச மாருதம் வீசமுன்
புனைது கில்கலை சோர நெஞ்சு
புழுங்கி னார்சில பூவைமார்
மனம னுக்கப்வி டத்த னித்தனி
வள்ள லைப்புணர் கள்ளவன்
கனவி னுக்கிடை யூற டுக்கம
யங்கி னார்சில கன்னிமார்

[பலவகை மலர்க்கூட்டங்கள் வாய்திறந்து வாசனை பொருந்திய இளங்காற்றை வீசுவதால், முன் தாம் அணிந்திருந்த ஆடையும் மேகலையும் நெகிழ மனம் புழுங்கினர் சில பூவைமார். கன்னிமார்களோ, தம் மனநோய் தணிந்து தனித்தனி இராமனைத் தழுவிய வஞ்சனையுடைய கனவினிற்கு (அக்காற்றினால்) இடையூறு நேரவே கண்விழித்து மிகவும் மயங்கினர்]

முன்னைநாள் இராகவன் வீதியாய் செல்லக்கண்டு,
நிறைப்பேர்
அணைநி ரந்தன வறிவெனும் பெரும்புன லணையார்
பிணைநி ரந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்

என்றும்,

மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
வண்டர் நாயகன் வரைபுரை யகலத்து ளலங்கற் [ர்ந்த
றெண்டை வாய்ச்சியர் நிறையொடு நாணொடுந் தொட
கெண்டை யும்முள கிளைபயில் வண்டொடுங் கிடந்த

என்றும் கம்பர் கூறியவைகளுக்கு இலக்காயிருந்த கன்னியர்களே போலும் இங்கு வள்ளலைத் தனித்தனி புணர்கின்ற கனவெனும் நன்னிலை கைவரப் பெற்றவர்கள். முதலுரைத்த பூவைமார் அக்கனவுங் கொள்ளப்பெறுதவ ராதல்வேண்டும்.

மொய்ய ராக நிரம்ப வாசை
முருங்கு தீயின் முழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும்
வானி லாநெடு வாடையு
மெய்ய ராவிட வாவி சோர
வெதும்பு மாதர்த மென்செவிப்
பைய ராநுழை கின்ற போன்றன
பண்க னிந்தெழு பாடலே

[வலிமையுடைய வேட்கை மிக, அதனால் ஆசையானது முருங்குகின்ற தீயைப்போல் அதிகரிக்க, அதனால் கூர்மை அராவியுள்ள மன்மதனது பாணங்களும், வானத்தில் நிலவும் வாடைக்காற்றும் உடலை அராவித்தள்ளவும், ஆவி சோரவும், வெதும்புகின்ற மாதர்களது மெல்லிய செவியில், படத்தையுடைய பாம்பு நுழைவதுபோல் பண்கனிந்து எழுகின்ற பாடல்கள் நுழைந்தன]

பண்கனிந்தெழு பாடல் இன்பத்தைப் பயக்குங்கால் அதனை நறவம் மாந்துதற் கிணையாய்க் கம்பர் கூறுவார்; மற்றப் புலவர்களும் கூறுவர். மென்மையும் இளகியதன்மையும்* இடையறுதொழுகும் நீர்மையும் தண்மையும் வழவழப்பும் செவிக்குச் சுவையளிக்கும் உண்மையும் ஆகிய குணங்களால் பண்கனிந்த பாடல் பசுந்தேறலை ஒத்திருக்கின்றது. மற்று, காம நோயால் கலங்கியிருப்போர்க்குச் சுவையூட்டலின்றி வருத்தமே விளைவிக்கின்றபோது அப்பண்கனிந்த பாடலுக்கு உவமையாகவல்லது யாவதெனத் தேர்ந்தெடுக்க ஆற்றலுடையவர் கம்பரே யாகின்றார். பாடலுக்குந் தேனிற்கும் பொதுத்தன்மையா யிருந்தவை யனைத்துந் தானுங்கொண்டு, இன்பமின்றித் துன்பமே செய்வதற்கியன்றது பாம்பொன்றே யாதலின், அவ்வொன்றுதானே கலைத்திறம் மிகுந்த கம்பருக்கு உவமைப் புலனாயிற்று.

இதுவரையிற் கூறியது கன்னியர்தம் செய்தி போலும். இனி, மணமுடிந்த பள்ளிவாய் வளர்ந்த சில மாதர் செயல் கூறுகின்றனர்.

ஐயு றுஞ்சுடர் மேனி யானெழில்
காண மூளு மவாவினாற்
கொய்யு றுங்குல மர்ம லர்க்குவை
நின்றெ ழுந்தனர் கூர்மைகூர்
நெய்யு றுஞ்சுடர் வேலெ னுங்கண்
முகிழ்த்து நெஞ்சி னினைப்பொடும்
பொய்யு றங்கு மடந்தை மார்குழல்
வண்டு பொம்மென விம்மவே

[கூர்மை வாய்ந்து நெய்பூசி ஒளிர்கின்ற வேல்போன்ற பெரிய கண்களை மூடிக்கொண்டு, (ஊடிய தம்) பற்பல நினைவினோடும் பொய்யாக உறங்குகின்ற மாதர், தம் கூந்தலில் வண்டுகள் பொம்மென ஒலிக்க, அழகிய சோதியுடைய மேனியையுடைய இராமபிரானது பட்டாபிடேக அழகினைக் காணவேண்டுமென்று மூள்கின்ற ஆசையோடு, பறித்துப் பரப்பிய சிறந்த பெரிய மலர்க்குவைகளாகிய படுக்கைகளை விட்டு எழுந்தனர்]

பள்ளியின்கண் ஊடிப் பொய்யுறங்கும் நங்கைமார், அவ்வூடல் தீர்ந்ததென்பதைத் தம்முயிர்க் காதலர்க்குத் தெரிவிக்கக் கைக்கொள்ளும் உபாயங்கள் பலவுள. அவைகளிற் சிலவற்றை முன் 'உண்டாட்டுப் படலத்தில்' இவ்வயோத்தி மாதர்களிடத்து,

துனியுறு புலவியைக் காதல் சூழ்சுடர்
பனியெனத் துடைத்தலும் பதைக்குஞ் சிந்தையாள்
புனையிழை யொருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு நலத்தினாற் கணவற் புல்லினாள்

[கோபத்தால் விளைந்த ஊடலை, காதல் என்னும் சூரியன் சூழ்ந்து பனிபோல அகற்றிவிடவும், காமத்தால் பதைக்கும் மனமுடையளாய், அணிந்த ஆபரணங்களையுடைய மயில்போன்ற பொய்த்துயில் புரிந்திருந்த ஒருத்தி, கனவு கண்டு வெருண்டவள்போல் நடித்துத் தன் கணவனைத் தழுவிக்கொண்டாள்]

என்றும், இன்னொருத்தி,

உய்த்தபூம் பள்ளியி னூட னீங்குவான்
சித்தமுன் டொருத்திக் கதன்பன் தேர்கிலான்
பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து போக்குவாள்
எத்தனை யிறந்தன கடிகை யீண்டென்றாள்.

[அமைத்த மலர்ப்படுக்கையிலிருந்த ஒருத்திக்குத் தான் கொண்ட ஊடலைத் தீர்ப்பதற்கு எண்ணமுண்டு. அதனை அவள் நாயகன் அறியவில்லை. ஆகையால், பொய்யாகச் சோம்பல் விடுவாள்போல் நடித்து, நாழிகை எத்தனை கழிந்தன வென்று கேட்டாள்]

என்றும், எல்லாச் சுவையும்போல் காமச்சுவையையும் கற்றுத்துறைபோகிய கம்பரே காட்டியிருக்கின்றார். அன்னவாறு யாதும் நிகழ்வதன்முன் கங்குல் நீங்கி யாமபேரிகை இசைத்துவிட்டபடியால், "ஊடல் கண்டவர் கூடல்கண் டிலர் நையு மைந்தர்கள் உய்யவே" எனச் சிறிது நகுவதும் அழகிதே. ஆயினும் கம்பருக் கிணையாய்க் காமப்பதம் பார்க்கவல்ல திருத்தக்க தேவர்,

பாடுவண்டிருந்தவன்னபல்கலையகலல்குல்
வீடுபெற்றவரும்வீழும்வெம்முலைவிமலையென்
றுடுவானணிந்தசீரம்பையன்னவாணுதல்
ஊடினும்புணர்ந்ததொத்தினியவளுளாரரோ

வெனப் புகன்ற விமலை போன்றவரும் சிலர் அயோத்தியில் இருந்து, ஊடினும் புணர்ந்ததொத்த இனிமையே தம் நாயகர்க்கு அளித்திருத்தலுங் கூடும்.

மந்தரை சொற்கேட்டு மன்னவன் மனத்துள் கைகேசி செய்தபுண் ஒருபோதும் ஆறுதெனினும், வேலுண்ட வேழம்போல் அவன் வருந்திய நிலைக்கிரங்கி உயங்கும் நம்மனோர் மனத்தைச் சிறிது ஆற்றுவான்வேண்டியே கம்பர் பள்ளியறைக் காட்சிகள் சில காட்டிவைக்க நினைத்தனர்.

உசித சமயம்	சர்வம் சொர்னமயம்.	உயர்ந்த வெகுமதி

சொர்ன சூரியனுடைய சொர்ன கிரணங்கள்.
சொர்னமயமான வாழ்வின் சொர்ன நாட்கள்.

சொர்னமயமான கோரிக்கையின் சொர்ன கிருத்தியங்கள். சொற்பயிரின் சொர்ன விதைகள்.	திடகாத்திரமான ஆரோக்கியத்தினுடைய சந்துஷ்டியான போஜனம் சொர்ன மாத்திரைகளில் தங்கமயமான பலம்.

சொர்ன 50 ல் சொர்ன வருஷங்கள் முடிவடைகின்றன.
சொர்ன 60 ல் சொர்ன உற்சாகங்க ளடங்கியுள்ளன.

இந்து தேசத்து புராதனமானதும் கீர்த்தி பெற்றதும் நிர்மலமானதுமான

ஆதங்க நிக்ரஹ ஔஷதசாலை
சொர்னோற்சவம்

நடக்கும் காலத்தில்

உற்சாகத்தையும், ஊக்கத்தையும், ஆதரவையும் கொடுத்து எங்கள் ஔஷதாலயம் ஜயபிரதமான 20 வருஷங்களைப் பூர்த்தியடையும்படிசெய்த வாடிக்கைகாரர்களுக்கும், எங்கள் நன்மை விரும்புவோர்களுக்கும், எங்களுடைய நன்றியறிவைக் காட்டும் பொருட்டு 60 சொர்னமயமான

சக்தி சஞ்சீவினி மாத்திரைகளை

வெகுமதியாய்ச் சந்தோஷத்துடன் கொடுக்க அறிவித்துக் கொள்கிறோம்.

இந்த மாத்திரையில் சேர்ந்த ஒவ்வொரு கூட்டுவர்க்கமும் மூளையின் பலத்தை விருத்திசெய்து ரத்தத்தைச் சுத்திகரித்து, ஞாபக சக்தியை அதிகப்படுத்தி, தேகத்தை வஜ்ர சரீரமாக்குகிறது. முழுமாத்திரையினுடைய குணவிசேஷத்தைச் சொல்லவும் வேண்டுமோ? குணத்தைப் புகழ்ந்துபேச வார்த்தைகளும் தவறிப் போகின்றன. மானிட ஜன்மமெடுத்த ஒவ்வொருவரும் அவர்களுடைய ஜீவித காலத்தில் ஒரு தடவை உபயோகித்தே தீரவேண்டும். மேலும் இந்தச் சொர்னோற்சவகாலத்தில் உபயோகிக்கிறவர்கள் ஒவ்வொருவரும் ரூபா 4. லாபமடைகிறார்கள்.

அதனுடைய விலை ரூபா 12. ஆக யிருந்தாலும் இச்சமயத்தில் ரூபா 8. க்கு விற்க முன் வந்திருக்கிறோம். இவ்விலை, மிக ஸார்தகமானதும், சுலபமாகச் சம்பாதிக்க முடியாததுமான கூட்டுவர்க்கங்களினுடைய விலைக்குக்கூடக் கிட்டாது.

இந்த வெகுமதி 1931ளு மே மாதம் கடைசிவரைக்கு மாத்திரம் செல்லும்படியாகும். பிறகு நிறுத்தி விடப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
ஜாம்நகர் கத்தியவார்.
பிராஞ்சு ஆபீசு:—26 பிராட்வே, மதராஸ்.

எங்கள் வாடிக்கைகாரர்களுக்கும் அபிமானஸ்தர்களுக்கும் வெகுமதி கௌபன்.

நான்கு ரூபா மதிப்புள்ளது	ஆதங்க நிக்ரஹ ஔஷதசாலை சொர்னோற்சவகாலத்தில்	நான்கு ரூபா மதிப்புள்ளது

எங்களுடைய வாடிக்கை காரர்களும், அபிமானஸ்தர்களும் இந்தக் கௌபனோடு ரூ. 8 யை எங்கள் தலைமை ஆபீசுக்காவது அல்லது பிராட்வே, மதராஸ் ஆபீசுக்காவது அல்லது மற்ற கிளை ஆபீசுகளுக்காவது அனுப்பினால் எப்பொழுதுமே ஒரு பைசாவைக்கூட குறைக்காமல் ரூ. 12. க்கு விற்று வந்த சொர்ன பூச்சுப் பூசின 60 சக்தி சஞ்சீவினி மாத்திரைகளடங்கிய புட்டி ஒன்று அனுப்பப்படும்.

பெயர்..
விலாஸம்..
....

18907

நோயற்ற :: :: வாழ்வே | ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள் | குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனும். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A., B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனும்! இனும்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினாலும், ஓர் அபூர்வ மூலிகையினாலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிறார்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ 5. தங்கம் ரூ. 15.

விலாசம் :—புரபசர். கா. கோவிந்தாச்சார்,
மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

Estd. NATIONAL **1906**
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.
Apply to :— R. G. DAS & CO., *Managers.*
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.
NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

HAIL & CO
HALFTONE & LINE BLOCK
MAKERS
THE BEST & FINEST HOUSE
for HALFTONE & LINE BLOCKS
on COPPER & ZINC.
CINEMA SLIDES AND DESIGNS ARE A SPECIALITY.
285, CHINA BAZAR ROAD.,
Opposite Telephone House MADRAS.
Agents Wanted Eevery - where.
Write for Particulars.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமபக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி வீசை ரூ-4. ஷை சாதாரகம் பொடி வீசை ரூபா $3\frac{1}{2}$. டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்கு அணா 4. டஜன் ரூபா $2\frac{1}{4}$ ஷை ஒரு சேர்டின் ரூபா $1\frac{3}{4}$ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

கலா நிலயம்

1930 ஆண்டு பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன.

1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வரைக.

விலை:—(தாபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ கில்ட்	9-8-0	11-0-0
ஆப்லெதர் கில்ட்	10-0-0	11-8-0

முன் பணம் அனுப்புவதே உத்தமம்.

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்

வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மலபந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரத்த சோகை, அஜீர்ணம், ஆயாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரக்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையும் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் தசைகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெறுகச் செய்கின்றது.

கேட்லாக் இனும்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபாற் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"

அருமையான பொடி ! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள் !!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.
புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

தபால் பெட்டி, நெ:—156

எச்சரிக்கை

எங்கள் பேடண்டு உரிமை அபகரித்தவர்களிருவர் நஷ்டம் கட்டிக்கொடுத்தனர். அறப்புப்பாளையம் K. R. குழந்தைவேலு செட்டியார் நம்முடைய

ருக்மணி குக்கர்

அடுக்கைப் போலவே செய்து மஹா லக்ஷ்மி குக்கர் என்று பெயர்சூட்டித் திருச்சிராப்பள்ளியில் தம் ஏஜண்டு பித்தளை சாமான் வியாபாரி S. T. S கோவிந்தசெட்டியார் மூலமாய்ப் போலி குக்கர்களை விற்றதினால் அவர்களிருவர்பேரிலும் நாம் வழக்குத் தொடர்ந்தோம். திருச்சிராப்பள்ளி ஜில்லா ஜட்ஜ் விசாரணையில் இவர்கள் இனிமேல் இப்படி உரிமையை அபகரிக்கும்படியாய், குக்கர் செய்யவாவது விற்கவாவது கூடாதென்றும் நமக்கு இதன்மூலம் நேர்ந்த நஷ்டத்தைக் கோர்ட்டு செலவுடன் இறுக்க வேண்டுமென்றும் தீர்ப்புச்செய்தனர். ருக்மணி குக்கரைப்போல் யாவரும் சொந்த உபயோகத்திற்காவது விற்பனைக்காவது செய்யக்கூடாது; போலி குக்கர்களை விற்கவும் கூடாது வாங்கவும் கூடாது என்று இதனால் தெரிவிக்கிறோம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம், சென்னைப்பட்டினம்.

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனாம் !

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாதமுள்ள இடம்இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவசமிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9, பிராட்வே, சென்னை.

மதிப்புரை.

பிரஜோத்பத்தி வருஷத்திய அமிர்தகுணபோதினி பஞ்சாங்கம்.

5-வது ஆண்டு 1931—1932.

சென்னைக் கவர்மெண்ட் காலேஜ் பஞ்சாங்கம் இயற்றிய பிரம்மஸ்ரீ பி. துரைசாமி ஐயங்கார் அவர்களாலும், அவர் குமாரர் பி. ஸ்ரீனிவாச வரதன் B. A. அவர்களாலும் புது விசேஷங்களுடன் பிழையறக் கணிக்கப்பெற்ற இப் பஞ்சாங்கம் எமது பார்வைக்கு வந்திருக்கின்றது. இது ஸ்ரீ. தி. இராஜகோபால் முதலியார் அவர்களால், மதராஸ், அமிர்தகுணபோதினி ஆபீஸில் பிரசுரமாகி இருக்கின்றது. கட்டடம் காகிதம் அச்சு முதலியவைகள் மிகவும் நன்றாக இருப்பதுடன், அனேக உபயோகமான விஷயங்கள் இப் பஞ்சாங்கத்தில் அடங்கியிருக்கின்றன. விலை 4 அணா. அமிர்தகுணபோதினி ஆபீஸ், மதராஸ் என்னும் விலாசத்தில் பெறலாகும்.

நல்லையந்தாதி.

யாழ்ப்பாணத்து-நவாலியூர் திரு. க. சோமசிந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

பொழில்வளம் தழைத்த நல்லையம்பதியின் கோயில் கொண்டருளிய முருகக்கடவுளின்மீது சார்த்திய தூநறுந் தேன்பொழி தமிழ்ப்பா மாலையாம் இவ்வந்தாதிநூலை ஆக்கிய க. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் நம் கலாநிலய வாசகர்களுக்குப் புதியவரல்லர். நம் நண்பர்களி லெண்ணிறந்தோர் பருகி மகிழுமாறு அப்புலவரது பாசுரங்கள் பல இவ்விதழ்களில் அவ்வப்போது திகழ்ந்துகொண்டிருக்கின்றன.

நல்லையந்தாதிப் பாடல்கள் ஓசையும் பொருளும் பக்திச்சுவையும் ஒருங்கு திரண்டு இனிதின் அமைந்திருக்கின்றன. நல்லையில் வைகும் சோதி வைவேற் பெருமான் திருவடி காண்டலும், "மண்ணியல் மாநுட யாக்கையும் இன்பம் வழங்கியதே" என்ன அவர் விம்மலுறும் பக்தி ஓதுவோரையும் தன்னுட் தழுவிக்கொள்ளுந் தன்மைத்து. இன்னும்,

பச்சைப் புரவிக் கருங்கடன் மேலே பருதியென
அச்சத்தை நீக்க எதிர்வரு வானவ் வசுரனுரந்
தைச்சுக் கிழித்துக் கடலைக் குடித்த தனிநெடுவேற்
கொச்சைக் குறத்தி மணவாளன் நல்லைக் குலவிளக்கே.

என்று அவர் அளிக்கும் உறுதிச்சொல்லால் ஆறுவார் பலர் அவ்வண்ணம் ஆறமாட்டாதவர்தமக்குக் கடவுளை வற்புறுத்திக் கேட்கவொரு வாய்மொழியும்,

கல்லா தவனரு ளில்லா தவனக் கனவிலுமெய் [டேல்
சொல்லா தவன்வெகு பொல்லா தவனெனத் தூரவி
இல்லா தவர்க்கே யருள்வது நீதி யிணையில்நல்லைச்
செல்வா திருப்பரங் குன்றத் துதித்த செழுஞ்சுடரே

என்ன நயமுறக் கற்பிக்கின்றார். இந்நூலின் இறுதியின்கண், அவர்,

புத்திக்கு மைந்து புலவனுக்கு முள்ளுயிர்ப் போதத்திற்கும்
அத்திக்கில் நிற்கினும் நல்லையிற் காண வமர்ந்திருக்கும்
சித்தித் தனிதெய்வ மேயருள் வாயடி சேருமட்டும்
தித்தித்தசெந்தமிழா லுனைப்போற்றுஞ்செழுந்திருவே

என்று வேண்டுகின்ற வரமல்லாமல் இவ்வுலகத் தகவயின் வேண்டற்பாலது வேறுசில உளவென்று மெய்யுணர்வுடையவர் ஒருவரும் உரைக்கமாட்டார்.

இவ்வாசிரியரது துணைவரும் மாணாக்கருமாகிய திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள் இந்நூலினைப் பிரசுரஞ்செய்த உதவியைப் பெரிது பாராட்டுகின்றோம்.

வர்த்தமானம்

மகாத்மா காந்தியடிகளும் இர்வின் பிரபுவும் நெடிதுநாள் கலந்துபேசி எய்திய முடிவினைப் பற்பலர் பற்பலவாறு கருதுகின்றார்களாயினும், இந்நாட்டின் நற்காலம் எய்தும்வேளை நெருங்கிவிட்டதென்னும் நம்பிக்கையே இந்தியா முழுவதும் உலவி வருகின்றது. காங்கிரஸ் காரியதரிசி, மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளுக்குக் கீழ்க்கண்ட அறிக்கை அனுப்பியிருக்கின்றார்:—

சட்ட மறுப்பு, வரி மறுப்பு முதலிய முயற்சிகள் நிறுத்தப்படவேண்டும்.

பிரிட்டிஷ் ஸாமான் பகிஷ்காரத்தை நிறுத்தவேண்டும். ஆனால் லாகிரி வஸ்துக்களையும் பிரிட்டிஷ் துணிகளையும் இயன்ற இடங்களிலெல்லாம் விலக்கலாம். மறியல் செய்வது மிகவும் சாத்வீகமாக இருக்க வேண்டும். இல்லையெனில் விட்டுவிட வேண்டும்.

உப்புச் சட்டத்தை ஒன்று கூடி ஏற்பாட்டுடன் மறுக்கலாகாது. ஆனால் உப்பு விளைகின்ற இடங்களிலிருக்கும் கிராமவாசிகள், தங்கள் உபயோகத்திற்கும் அக்கம்பக்கத்தில் விற்பதற்கும் வேண்டிய அளவு உப்பு செய்துகொள்ளலாம். ஆனால் வெளிச்சென்று இவ்வுப்பை வியாபாரஞ் செய்யலாகாது.

நிலவரிகளைக் கொடுத்துத் தங்கள் கிராமங்களுக்குப் போய்விடவேண்டும்.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்டுகள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய், கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
மதுரை, காஞ்சீபுரம்.

188907

KALANILAYAM. REG. NO. M. 2324.

என். ஜே. தேசாய்ஸ்

உயரிய உத்திரவாதமுள்ள
கஸ்தூரி
மாத்திரையையே
எப்போழுதும் உபயோகியுங்கள்.
ஆண், பெண், குழந்தைகளுக்கு
இன்றியமையாத
ஓர் சிறந்த டானிக்
250 மாத்திரை கோண்ட
புட்டி அணா 6. டஜன் ரூபா 3.
தபாற் கூலி இனம்.

24-மணி நேரத்தில் ஆச்சரிய குணம்!!!
உயரிய உத்திரவாதமுள்ள
சர்வ படை மருந்து

டப்பி 1-க்கு விலை அணா 6. டஜன் ரூபா 3.
தபாற் கூலி இனம்.

மிகுந்த மணம்! சிறந்த குணம்!!
- பால் பெருங்காயத்தை -
உபயோகியுங்கள்.

கருப்புப் பெருங்காயம் ஒருவீசை உபயோகிப்பதற்கு இது ஒரு தோலாஉபயோகித்தால் போதுமானது. டப்பி 1-க்கு விலை அணா 4. டஜன் ரூபா 3. தபாற் கூலி இனம்.

சிறந்த நோய் நிவாரணி
ஆர்யாஞ்ஜன்
எல்லா வலிகளையும்,
வீக்கங்களையும், நோய்
களையும் நீக்குவதில்
ஒப்புயர்வற்றது.
புட்டி 1-க்கு விலை அணா 8.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். 88, தங்கசாலை வீதி, சென்னை.

N. B. விபர கேட்லாக்கிற்கு எழுதவும். சென்னைக்கும் வெளியூருக்கும் விற்பனை வியாபாரிகளும், கான்வாஸர்களும் தேவை. கடிதங்கள் இங்கிலீஷில் எழுதுக.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

:: பிரபல ஜோதிஷர் :: மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீநிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)